# பொய்யாமொழி

கல்வி, கலை, இலக்கிய, சமூக இதழ்




மார்ச் 08 பெண்கள் நாளை நினைவுபடுத்தும் மாசி-பங்குனி சிறப்பிதழ்

எம் கண்ணை மறைத்திருக்கும் சின்னத்திரையை விலக்குவோம்
காதுகளை அடைத்திருக்கும் நெகிழி(பிளாத்திக்)அடைப்பான்களை கழற்றுவோம்
நம் உயிர்க்கண்ணால் உண்மைக் கண்ணால் உலகைப் பார்ப்போம்
இருள் விலக்கவும் வெளிச்சத்தைக் காணவும் இதுவே வழியென்றறிவோம்

திருவள்ளுவர் ஆண்டு 2049 மாசி 24-பங்குனி 25 (ஆங்கில ஆண்டு (08.03.2018-08.04.2018)

# உள்ளடக்கம்...

## கட்டுரைகள்


தாய்தான் பல்லுயிர் பெருமரத்தின் ஆணிவேர் ....................4
பெண்ணே! நீ! ....................10
தமிழை நன்றே பேசுவோம் ....................15
பரதத்தில் முரண் ....................16
தேனீக்கள் உலகைக் காப்பாற்றுவது பற்றி தெரியுமா? ....................24
மெல்லக் கற்கும் மாணவர் எதிர்கொள்ளும் தடைகள்.................... 33


## கல்விப்பகுதி


கடந்த தை -மாசி இதழின் தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாளுக்குரிய விடைகள்....................37
தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்....................38
சிறுவர்கதை- நரியும் சின்ன முயலும் ....................53
சொற்புதிர் ....................56
ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடித்தல் (Word search)....................57
சிறுவர்கதை (ஆங்கிலத்தில்) UNHELPFUL FRIENDS....................58
சங்ககால தமிழர்தம் வாழ்வியல் (உயர்தர மாணவர் குறிப்பெடுக்க உதவும் வகையில் அமைந்தது) ....................60
**சிறுகதை** - துளைகள் ....................29


## கவிதைகள்


நான் இன்னும் எழுகிறேன், மேன்மை மிகு தேசமே (கவிதைகள்) ....................8
**புதிய விடுகதைகள்** (கடந்த இதழின் குறுக்கெழுத்துப் புதிருக்கான விடைகளை அப்பக்கத்தில் பார்க்கலாம்) ....................59
மனித இனத்தின், ....................68



"பொய்யாமொழி" இதழ் தொடர்பான அனைத்து தொடர்புகளுக்கும்
கைபேசி தொடர்பு எண்: 0771461509
Viber (வைபெர்) , WhatsApp (வாட்ஸ் அப் ) இலும் தொடர்பு கொள்ளலாம்
மின்மடல் முகவரி: poiyaamozhi2018@gmail,com



இந்த இதழ் யாழ். பொய்யாமொழிக் குழுமத்தால் வெளியிடப்படுகிறது


பதிப்புரிமை பொய்யாமொழிக் குழுமத்துக்கு மட்டுமே.

# நீர் இன்றி அமையாது உலகு

"நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"

மழை இல்லையேல் நீரில்லை.நீர் இல்லாமல் உலகவாழ்க்கை நடை பெறாது.அதனால் தான் உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என திருக்குறள் சொல்கிறது.

மாந்த (மனித) இனத்திற்கு பெருங்கொடை, இயற்கை வளங்கள்தான். இயற்கை வளங்கள், சமீப காலத்தில் இருந்து மிகவும் குறைந்து கொண்டே வருகின்றன.

இன்றைய சூழலில் தூய காற்றை உள்ளெடுக்க முடிவதில்லை. தூயநீரைப் பருக முடியாதநிலை உள்ளது. நீர், நிலம் இவ்விரண்டுமே தமது தன்மையை இழந்துவருகின்றன. நீர் நிலைகள் அழிந்தும், காட்டுவளங்கள் குறைந்தும் வருவதால் நாங்கள் பெரும் ஆபத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றோம்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதனின் வாழ்க்கை இதமாக இருந்தது. இயற்கைத் தாயின் அரவணைப்பில் நிறைவான வாழ்க்கை வாழ்ந்தான் அவன். கால ஓட்டத்தில் மனிதன் மாறத் தொடங்கினான். புதிய கண்டுபிடிப்புகள் பலமாற்றங்களை உருவாக்கின. தொழில்நுட்பம் பல்கிப் பெருக ஆரம்பித்தது. புதிய இயந்திரங்களின் வருகையால் தொழிற் புரட்சிகள் உலகெங்கும் பரவத் தொடங்கின. இதன் விளைவாக, தன்னை வாழவைத்த இயற்கையையே மனிதன் அழிக்கத் தொடங்கினான். தன் அறிவாற்றலால் உருவாக்கிய தொழிநுட்பத்திற்கே மனிதன் அடிமையாகத் தொடங்கினான். தன்னையே இழக்கத் தொடங்கினான். தொழில்நுட்ப வளர்ச்சியால் எவ்வளவுக் கெவ்வளவு நன்மைகளை மனிதன் அனுபவிக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு தீமைகளையும் மனிதன் அனுபவிக்கிறான். நியூட்டனின் மூன்றாம் விதி இங்கே நினைவு கூரத்தக்கது. தொழில்நுட்ப வளர்ச்சியினூடாக மனிதன் இயற்கை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தினானோ அதற்கு சமனானதும் எதிரானதுமான விளைவுகளை இப்பொழுது அவன் சந்திக்கிறான். எனவேதான், இயற்கையால் மனிதன் வஞ்சிக்கப்படுவதற்கு காரணமும் மனிதனேதான்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவன் இம்மாற்றங்களின் எதிர் விளைவாக இயற்கைக்கே எதிரியாக மாறிவிட்டான். உலகமயமாதல் என்னும் முதலாளித்துவப் பாய்ச்சலானது, எதிர்காலத்தில் மனிதன், தான் வாழ இன்னொரு கோளைத் தேடி ஓட வேண்டிய அவலநிலையை உருவாக்குகிறது .

அண்மையில் காலமான உலகப்புகழ் பெற்ற இயற்பியலாளரும் வானியல் விஞ்ஞானியுமான ஸ்டீபன் ஹொக்கிங் என்னும் அறிஞரும் "இயற்கை வளங்களின் மீதான மனித மேலாண்மை இப்பொழுது உள்ளதுபோன்றே கண்மூடித்தனமாகத் தொடரப்படுமாயின், வளப்பற்றாக்குறையுடன் சூழல் மாசடைதலும் ஆபத்தான கட்டத்தை அடையும். அப்பொழுது மனிதஇனம், பூமியை விட்டுவெளியேறி வேற்றுக்கோளுக்கு இடம்பெயரவேண்டி ஏற்படலாம்" எனத் தெரிவித்துள்ளார். ஒருவேளை அந்நிலை ஏற்பட்டால் கூட அங்கும் பணத்தின் மீதுமிதக்கும் மனிதர்களே செல்லமுடியும் என்பதுதான் உண்மை.

இயற்கையை நாம் அழித்துக் கொண்டே இருக்கிறோம் என்பதைத் தெரிந்தேதான் மனிதன் செய்கிறான். ஆயினும் மறுபக்கத்தில் சில நம்பிக்கை தரும் விடயங்களும் நடந்துதான் வருகிறது.

அண்மையில் ஓசோன் படலத்தின் மீதான துவாரத்தை மீளாய்வு செய்த விஞ்ஞானிகள் குழுவொன்று, "அத்துவாரம் முன்பிலும் சிறியதாகியுள்ளது. இது மகிழ்ச்சியளிக்கிறது. ஓசோன் படலத்தை அரித்து துவாரமிடும் வாயுக்களான குளோரோ புளோரோ காபன்கள், ஹைட்றோ குளோரோ புளோரோ காபன்கள் (CFCs and HCFCs) போன்ற வாயுக்களின் வெளியேற்றத்தை மட்டுப்படுத்த உலக நாடுகள் கடைப்பிடித்துவரும் உறுதியான செயற்பாடுகளே இந்த மாற்றத் துக்குக் காரணம்" என்று தெரிவித்திருந்தனர்.

மேற்படி நன்மை தீமைகளை ஆராயாது, ஆளும் வர்க்கங்கள், அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, நல்லாட்சி நியமங்களுக்கு அப்பாற் சென்று, விண்ணே அதிர பாய்ச்சப்படும் நச்சுப்புகைகளால் உதிரம் சிந்துகிறாள் இயற்கைத்தாய்.

மனிதத்தைத் தன்னுள் புதைப்பதைக் கண்டு, பாறையாக இறுகிக் கிடக்கிறாள் மண்தாய் ஈரலிப்பற்று. ஆதிக்கத் தாண்டவ அரங்கேற்ற சதிகளால் கரையொதுங்கும் மனிதம் கண்டு, இந்து ஆழியைப்போல் பொங்கிய மனங்களும் அமைதியாக்கப்படுகிறது நந்திக் கடலைப்போல்.

செவ்வண்ணத்தில் மண் நனையும் போதும், கண்ணீர் மழையால் நிலம் வெள்ளக்காடாகும் போதும், உயிர்வலியால் உயிரினங்கள் துடித்துத் துடித்து அழும்போதும், ஆற்றாமையால் இயற்கை அழுகிறது. தாயின் சாவை உணராமல் பச்சிளங்குருத்து தாயிடம் பால் அருந்தும் போது, குமுறிக்குமுறி இயற்கை கொந்தளித்தது அன்றி, அரச இலச்சினை பொறித்த இரும்புத் தொப்பியை அணிந்த மனிதர்கள் செய்த அனர்த்தம்போல் ஒருபோதும் இயற்கை எமக்குப் ஏற்படுத்தியதில்லை.

எங்கள் கண்ணெதிரே மண்ணும் விண்ணும் நிலமும் நீரும் சூறையாடப் படுவதையும், மாசாக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நாம் வாழ்வதற்கு தூய்மையானதும் வளம்நிறைந்ததுமாக எமது நிலைகளைப் பாதுகாக்கவேண்டுமல்லவா? பாதுகாப்போம், எம்மால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு பாதுகாப்போம்.

பகலவனை வணங்கி, பகலவனோடு பயணித்த நம் மூதாதையர் நம்மிடம் விட்டுச்சென்ற பணியை நாம் தொடரவேண்டும். அவர்களின் செயற்பாட்டின் கரணியங்களை ஆராய்வோம். அவற்றை எமது பகுத்தறிவுக் கண்களால் உற்றுநோக்குவோம். பொருத்தமான வழியில் அறிவாற்றலின் துணையோடு முன்னெடுப்போம். இயற்கையை நேசிப்போம். அறிவைப் பெருக்க வாசிப்போம்.

"பல குடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்"

உழுதலால் தானிய வளம் உடைய உழவர், உலகம் முழுவதிலுமுள்ள பல அரசர் நாட்டையும் தமது அரசரின் குடைக்கீழாகக் காண்பர்.

என்ற வள்ளுவன் சிந்தனையைப் புரிந்து பணியாற்ற முயற்சிப்போம். எதிர்காலத்தை எமதாக்குவோம்.

# தாய்தான்
## பல்லுயிர் பெருமரத்தின்
# ஆணிவேர்



"தாய்மார்கள் மட்டுமே வருங்காலத்தை சிந்திக்க முடியும்- ஏனென்றால் அவர்கள்தான் குழந்தைகளின் வடிவில் வருங்காலத்தைப் பெற்றெடுக்கிறார்கள்" - மாக்ஸிம் கார்க்கி

(உலகின் மிகச் சிறந்த புதினங்களில் ஒன்றான 'தாய்' என்ற அற்புதமான புதினத்தை எழுதிய உருசியா நாட்டை சேர்ந்த பிரபல எழுத்தாளர்தான் மார்க்ஸிம் கார்க்கி.)

"அன்னைக்கு இல்லாத பாசமா?
அவளுக்கு இல்லாத நேசமா?..."

மனதை நெகிழவைக்கும் பாடல் வரிகள். இலங்கை வானொலியில் 70 களில் ஒலிபரப்பான ஈழத்து மெல்லிசைப் பாடலின் முதல் வரிகள் இவை. அண்மையில் இந்திய புதின ஊடகங்களில் வந்த தகவல் ஒன்று பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.


அமெரிக்காவில் இருந்து ஊருக்கு வந்த மகன் தாயார் வசிக்கும் வீட்டின் கதவைத் தட்டினான். திறக்கப்படவில்லை. வேறு சாவி போட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றபோது தாயாரின் எலும்புக் கூட்டைத்தான் அவனால் பார்க்க முடிந்தது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரியும் அவனால் ஒரு ஆண்டாக தொலை பேசியில் தாயாரோடு பேச முடியவில்லை.

பணம்மட்டும் தான் வாழ்வென்ற எண்ண ஓட்டம் மனிதர்களை இப்படியெல்லாம் மனிதநேசத்தை துடைத்தெறியவைத்துவிட்டதே. இது அன்னிய நாட்டுக்கு உழைக்கச் சென்ற ஒருவனின் தாயின் நிலை. வெளிநாடுகளில் பிள்ளைகளும், இங்கு பெற்றோரும் என்ற வாழ்க்கை. தாய்மார்தான் தனிமை என்னும் கொடுமையில் பெருமளவில் தவிக்கின்றவர்கள்.

சார்ந்து வாழும் வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்கள் பெண்கள். சிறு வயதில் தந்தை,வளர்ந்த பின் கணவன், பின்னர் மகனுக்கு என கட்டுப்பட்டு வாழும் நிலை பெண்களுக்கானது என வலியுறுத்தப்படுகிறது. இந்த நிலை தொடர்கிறது.அதனால் எந்த பிரிவும் அவர்களை தனிமை என்னும் கொடுமைக்குள் இலகுவில் தள்ளிவிடுகிறது. அதனால் ஏற்படும் மன உளைச்சல் அவர்களை விரைவில் நோயாளிகளாக்கிவிடுகிறது.

இன்று எமது மண்ணிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி வேலைக்கு போகும் பெண்கள்உட்பட பெரும்பாலான எமது பெண்கள் யாரையோ சார்ந்து தான் வாழ்கிறார்கள். தாம் இவ்வாறு வாழ்வது மட்டுமல்லாமல் தமது பிள்ளைகளையும் அப்படியான

சிந்தனையுடன் வாழவே பழக்கப் படுத்துகிறார்கள்.இதிலிருந்து எப்படி இவர்களால் விடுபட முடியும்? உலகின் மனிதகுல வரலாறு, தாய்வழி குமுகாயம் அதனைத் தொடர்ந்த தந்தைவழி குமுகாயம் பற்றி சொல்கிறது. கூட்டு உழைப்பில் வாழத்தொடங்கிய தொடக்க கால குமுகாயத்தில் இனக்குழு, நாடோடி, நிலவுடைமை ஆகிய மூன்று படி நிலைகளில்மானுட குமுகாயம் வளர்ச்சி பெற்றது.. நிலவுடைமைச் குமுகாயத்தில் தான் குடும்ப அமைப்பு உருவானது. இக்குடும்பத்தில் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களைப் பெண் பாதுகாப்பதோடு குடும்ப நிருவாகத்தையும் பெண் பார்ப்பதாக அமைந்தது. இதுவே தாய்வழி குமுகாயமாகும்.இந்த நிலவுடைமைக் குமுகாயம் வளர்ச்சி பெற்ற நிலையில் பெண்ணின் உழைப்பு சுரண்டப்பட்டுக் குடும்ப அரசியல், பொருளாதாரம், உடலமைப்பு போன்ற அடிப்படையில் பெண் அடிமைப்படுத்தப்பட்டாள். இவ்வாறு பெண்ணை அடிமைப்படுத்தும் ஆணாதிக்கப் போக்கே தந்தைவழிக் குமுகாயமாகும். இந்நிலையில் உலகளவில் பெண்ணை அடிமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் பெண்ணைப் பொருளாகவும் பார்ப்பதாக இந்த மாந்த குமுகாயம் விளங்குகிறது.



காலங்காலமாக சமுதாயத்தின் மூளையில், 'பெண்கள் பலவீனமானவர்கள்', 'பெண்கள் அடிமையாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்' என்ற கருத்துருக்கள் திணிக்கப்பட்டு, மத ரீதியாக,புராண, இதிகாச ஆணிகளால் அடித்து அறையப்பட்டுவிட்டன. அதிலிருந்து பெண்களை விடுவிப்பது சாதாரணமானதல்ல. ஆனால் விடுவிக்கப்பட வேண்டும். குடும்பம், குமுகாயம், நாடு என்ற ஒவ்வொரு கட்டமைப்புக்களிலும் தாய் முக்கிய மானவள். தாயால் தான் தனது பிள்ளையை சரியான பாதையில் வழிநடத்த முடியும். அப்படியானால் தந்தையின் பங்கு இல்லையா என்ற கேள்வி எழும். தாயோடு பிள்ளை செலவழிக்கும் நேரமே அதிகம். ஆண் வெளியே சென்று உழைத்து குடும்பத்தை காப்பாற்றுபவனாகவும், பெண் வீட்டிலிருந்து குழந்தைகளை பராமரிப்பதுடன் வீட்டுவேலைகள் அனைத்தையும் செய்பவளாகவும் இருக்க வேண்டும் என்ற வரைமுறை காலங்காலமாக நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. இன்று பெண்கள் வேலைக்கு செல்கின்றார்கள். ஆனாலும் காலை வெளியே வேலைக்கு சென்று மாலையில் வீட்டுக்கு வரும் பெண்தான் வீட்டுவேலைகளையும் செய்ய வேண்டும் என்பதுதான் நியதியாக உள்ளது. இப்போதும் பெண்கள் தான் பிள்ளைகளை முழுமையாக கவனிக்கவேண்டும். ஒரு பிள்ளை தவறு செய்தால்தாயை மட்டுமே குற்றஞ்சாட்டும் நிலைதானே இன்னும்



இந்த குமுகாயத்தில் நிலவுகிறது. அன்பு, அரவணைப்பு,அக்கறை என்பன ஒரு தாயிடமிருந்தே பிள்ளைக்கு கிடைக் கின்றன. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பிள்ளையை நேசிக்க தாயால் மட்டுமே முடியும். தந்தைக்கு பிள்ளை மேல் உள்ள அன்பை குறைத்து மதிப்பிட வில்லை.ஆனால் தாயின் வளர்ப்பு தான் பிள்ளையை சரியான பாதையில் நடத்துகிறது.

தாய்வழி குமுகாய காலத்திலேயே பெண்ணிடம் தன் உயிரை மட்டும் காத்துக்கொள்ள வேண்டும் என்ற சுயநலப்போக்கு இருந்திருக்கவில்லை. மாறாக, தனது வலிமையைத் திரட்டி தன் கூட்டத்தின் பசியைப் போக்கி, ஆபத்தான விலங்குகளின்மத்தியில் கூட்டத்தாரின் உயிரைக் காத்துப் பேண வேண்டும் என்ற பரந்துபட்ட மனச் சிந்தனையே அன்றைய பெண்களின் உளவியலாக அமைந்திருக்கின்றது. அதேநிலைதான் இன்றும் பெண்களி டம் உள்ளது. ஆனால் இந்த சிந்தனை பலவழிகளால் மடை மாற்றப்பட்டு மெல்ல மெல்ல மறைந்து போய்விடுமோ என்ற அச்சம் மேலோங்குகின்றது.

பெண்களின் சிந்தனை, ஆடை அணிகலன்களில் அதிகமாக ஆசைப் படுதல், கவர்ச்சிகரமான அழகுபடுத் தலில் கூடுதல் ஈடுபாடு என திசைகளை சிதறடிக்க பலவிளம்பரங்கள் தொலைக் காட்சிகளில் அடிக்கடி வந்து போகின் றன. அதுமட்டுமல்லாமல் கூடுதலான நேரத்தை சின்னத்திரைகளுக்குள் முடக்கி அதில் வரும் தொடர்களுக்குள் தம்மை மூழ்கடிக்கிறார்கள். இதனால் வாசிப்புப் பழக்கம் முற்றுமுழுவதுமாக மறைந்து கொண்டுவரும் ஆபத்து நெருங்குகிறது. பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை சொல்லித்தர வேண்டிய தாய்மார் தொலைக்காட்சி, கைபேசி என தமது உலகத்தை அதற் குள் திணித்து விடுவதால் பிள்ளை களோடு செலவிடும் நேரம் குறைந்து கொண்டே போகின்றது. பலகதை களோடு பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வரும் பிள்ளை அம்மாவுக்காக காத் திருக்க, அம்மா அவசர அவசரமாக சாப்பாட்டை பிள்ளைக்கு கொடுத்துவிட்டு தொலைபேசியுடனோ, தொலைக்காட்சித் தொடருடனோ தன்னை இணைத்துக் கொண்டால், பிள்ளைகள் யாரிடம் போய் தமது கருத்துக்களை சொல்வார்கள்? இப்படியே பிள்ளை மெல்ல மெல்ல அம்மாவிடமிருந்து தனித்து விடப்படும் ஆபத்து அதிக மாகிறது. பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் அக்கறை செலுத்த வேண்டிய தாய்மார், அதிலும் தங்கள் பொறுப்பை தவறவிட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி அமையும்?

தொழில்நுட்ப சாதனங்கள் பெருகி விட்டன. இன்றையகாலத்தில் வாசிப்புத் தன்மை குறைந்து வருகின்றது. அறிவை

வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் குறைகிறது. சிந்தனைத் திறனை அதி கரிக்க,படைப்பாற்றல் திறனை வளர்க்க அதிகமாக வாசிக்க வேண்டும்.


எது நல்லது? எது தீயது என்ப தனை தெரிந்துகொள்ள வேண்டும். அதனூடாகவே தமது பிள்ளைகளை தாய்மாரால் சரியான முறையில் வழி நடத்த முடியும். புத்தகம் வாசிக்கின்ற பழக்கத்தை இளம் அகவையிலேயே குழந்தைகளின் மனத்தில் விதைக்க வேண்டும். படிப்பதைவிடப் பார்ப்பது இன்று அதிகரித்துவிட்டது.

புத்தகம் படித்தல், விளை யாடுதல் என்பதையெல்லாம் மறந்து, கைப்பேசியைப் பயன்படுத்துவதிலும், கணிணி யில் காணொலி பார்த்தல், ஆட்டங்களை விளையாடு வதிலும் பிள்ளைகள் மிக அதிகமாக ஈடுபடுகிறார்கள். இதனால் இளம் அகவை யிலேயே அவர்களின் சிந்திக் கும் ஆற்றல் தடைப்படுகிறது. பிள்ளைகளை இவற்றிலிருந்து விடு விக்க தாய்மார்களால் மட்டுமே முடியும்.

நூலகங்கள் என்றால் என்ன என்று பிள்ளைகள் கேட்கும் அவலநிலை கூட வரலாம். குமுகாய, கலை, இலக்கிய, வரலாற்று, அறிவியல் நூல்களைப் படிப்பது, வாழ்வில் நம்மை உயர்த்திக் கொள்வதற்காகவே என்பதை தாய்மார் புரிந்து கொண்டு பிள்ளைகளுக்கு அதனை புரியவைத்தால் எங்கள் குமுகாயம் சிறந்து மேம்படும்.

– தங்கா மணி






பெலகேயா நீலவ்னா, பாவல்விலாசவ் எனும் தாய்-மகனுக்கு இடையேயான அன்பின் அற்புதப் பிணைப் பின் உணர்வுபூர்வ உள்ளடக்கமே இந்நாவல். ஒரு தாயின் பாச உணர்வு, தன் மகன் மீதான அளப்பரிய அன்பால், கொள்கையின் மேல் ஏற்பட்ட பிடிப்பால், பொதுவுடமை சித்தாந்தத்தின் மீது ஒரு ஈடுபாடு உருவாகி, அதை உழைக்கும் மக்களிடத்திலும் பாகுபாடு நிறைந்த சமூகத் திலும்தழைத்தோங்க, வீரியம் பெற, தாமே விதையாக வீழ் வதை தேர்ந்த இலக்கிய நடை யுடன் விவரிக்கும் படைப்பே இந்த அற்புத காவியம்.

(இது தாய் நாவலின் வாசகர் ஒருவரின் கருத்து)



# இன்னும் நான் எழுகிறேன்

மொழிபெயர்ப்புக் கவிதை

நீ என்னை எழுதி வைக்கலாம் வரலாற்றில்
உன்னுடைய கசப்பான, திரிக்கப்பட்ட பொய்களால்.
நீ என்னை அமுக்கலாம் அந்த
அழுக்கில்
ஆனாலும், தூசியைப் போல்,
நான் எழுகிறேன்.
என்னுடைய இடக்குத்தனம்
உன்னை எரிச்சலடைய
செய்கிறதா?
ஏன் தீவிரமாகத் தாக்கப்
பட்டிருக்கிறாய் அந்தகாரத்துடன்?
ஏனென்றால் நான் நடக்கிறேன்
நான் எண்ணைக் கிணறுகள்
பெற்று
என்னுடைய வசிக்கும் அறையில்
இறைப்பது போல்.
சந்திரன்கள் போல் மற்றும்
சூரியன்கள் போல்,
அலைகளின் நிச்சியத்துடன்,
உயர்ந்து துள்ளும் நம்பிக்கைகள் போல்,
இருந்தும் நான் எழுகிறேன்.
நான் உடைவதை பார்க்க நீ விரும்பினாயா?
குனிந்த தலை மற்றும் தாழ்ந்த கண்களுடன்?
தோள்களின் கீழே விழும் கண்ணீர் துளிகள் போல்,
சக்தி இழந்த என்னுடைய உணர்ச்சிப் பண்பார்ந்த அழுகைகளை.



மாயா ஏஞ்சலா (Maya Angelou)
அமெரிக்க கவிஞர் (1928–2014)

என்னுடைய தாழாமை உன்னை புண்படுத்துகிறதா ?
எடுத்துக் கொள்ளவில்லையா நீ அதனை மட்டுமீறிய கடினத்துடன்
ஏனெனில் நான் சிரிக்கிறேன் நான் தோண்டப்படுகின்ற
தங்கச் சுரங்கங்கள் வைத்திருப்பதைப் போல்
என்னுடைய சொந்த புழக்கடையில்
நீ என்னை சுடலாம் உன் வார்த்தைகளால்,
நீ என்னை வெட்டலாம் உன் கண்களால்,
நீ என்னை கொல்லலாம் உன் தீவிர வெறுப்பூட்டுதலால்
இருந்தும், காற்றைப் போல், நான் எழுகிறேன்.

வரலாற்றின் அவமானக் குடிலின் வெளியிலிருந்து
நான் எழுகிறேன்.
அந்த வலியின் மூலத்தாலான பழமையின் மேலிருந்து
நான் எழுகிறேன்.
நான் ஒரு கருப்புக் கடல், குதிப்பு மற்றும் அகலம்,
பீறிடும் துள்ளலும் நான் கொண்டிருக்கிறேன் அலையில்.

இரவுகளின் அச்சுறுத்தலையும் பயத்தையும் பின் விடுத்து
நான் எழுகிறேன்.
அந்த என்னுடைய மூதாதையர்கள் கொடுத்த கொடைகளைக் கொண்டு
வருகிறேன்
நான் அந்த கனவு மற்றும் நம்பிக்கையின் வழியில்.
நான் எழுகிறேன்.
நான் எழுகிறேன்.
நான் எழுகிறேன்

# மேன்மை மிகு தேசமே

மேன்மை மிகு தேசமே
இருள் மிகுந்த பெருந்துயர் இரவில்
திரிகைக்கல் சுழலலாம்
மேலும் சுழலலாம்
ஆயின் உன் ஒளியை
அழித்தொழிப்பதற்கு
அவற்றால் இயலா
அவை மிகச் சிறியன.

ஓ பெரிய தேசமே
ஓ ஆழமான காயமே
தனிப்பெரும் காதலே
நசுக்கப்பட்ட உன் நம்பிக்கைகளில்
இருந்து
ஒடுக்கப்பட்ட உன் வளர்ச்சியில்
இருந்து
திருடப்பட்ட உன் முறுவலில் இருந்து
திருடப்பட்ட
உன் குழந்தைகளின் சிரிப்பில்
இருந்து


பாலஸ்தீனக் கவிஞர் ஃபத்வா துக்கான்
(மொழிபெயர்ப்பு எம். ஏ. நுஃமான்)

சிதைவுகளிலிருந்து
சித்திரவதைகளில் இருந்து
இரத்தம் உறைந்த சுவர்களில்
இருந்து
வாழ்வினதும் மரணத்தினதும்
நடுக்கங்களில் இருந்து
அது எழவே செய்யும்.

# பெண்ணே! நீ!




மார்ச் 8. அனைத்துலகப் பெண்கள் நாள். பெண்கள் தங்கள் உரிமைக்காக ஓங்கிக் குரல் கொடுத்த நாள்.. அன்று தொட்டு இன்று வரை பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டப் போராடி வருகின்றனர். அந்தப் போராட்டத்தின் குறியீடாக அமைகின்ற நாள்..... என் றெல்லாம் கூறப்படும் நாள் இந்த மார்ச் 8.

"பெண்கள் நாள்(International womens Day) இன்று கொண்டாடப்பட வேண்டியதன் அவசியம் என்ன? பெண்ணடிமைத்தனம் எல்லாம் இப் போது இல்லை. பெண்கள் இல்லாத துறைகளே இல்லை. ஆண்களுக்கு இணையாக பெண்கள் எல்லா இடத்திலும் கால் பதித்து விட்டார்கள். அப்படியானால் இப்போதும் பெண்ணியம் ஏன் பேசப் படுகிறது? உண்மையில் பெண்ணியம் என்றால் என்ன? ஆண்களுக்கு எதிரானது தான் பெண்ணியமா? " என்றெல்லாம் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டு..........இந்நாளில் பல பெண் எழுத்தாளர்கள், பெண் படைப் பாளர்கள், பெண் கருத்தாளர்கள், பெண் கலைஞர்கள் எனப் பல்வேறு துறை களிலும் உள்ள பெண்களை அழைத்து சிறப்பு நிகழ்ச்சிகளை ஊடகங்கள், ஒலி, ஒளிபரப்பு நிகழ்ச்சிகளாக மக்களுக்கு வழங்குவார்கள். அந்த நிகழ்ச்சிகளை, அந்த நாளில் பெண்களே தொகுத்து வழங்குவார்கள். அந்த நிகழ்ச்சிகள், பெண்ணிய வாதிகள், குமுகாய செயற்பாட்டாளர்கள், கருத்தாளர்கள், குமுகாயத்தின் மீது அக்கறை கொண்ட வர்கள் என்னும் வரையறைக்குள் அடங்குகின்ற, ஏற்கனவே பெண்ணியம் தொடர்பான பார்வை உள்ள. அதிலும் இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்க்கக் கூடிய தொடர்பு சாதனங்கள் உள்ளவர் களையே சென்றடைகின்றன. அவை போன்றே செய்தித்தாள்களும் அன்று மட்டும் ஏதோ சில கட்டுரைகளை அச்சிலேற்றுவார்கள். எல்லாமே நடுத் தர, மேல்மட்ட நிலையிலுள்ள மக்க ளையே சென்றடைகின்றன. அன்றாட வாழ்க்கைக்காக ஒவ்வொரு நாளும் போராடும் நிலையிலுள்ள மக்களை இந்த சிந்தனைக் கருத்துகள் சென்றடை வதில்லை. அவற்றை ஓய்வாக இருந்து பார்க்க அந்த உழைக்கும் தரப்பினருக்கு நேரமும் இருப்பதில்லை.

இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடிய வசதியுடைய நடுத்தர மேல்தட்டு வர்க்க மனிதர்கள், பெண்கள் உட்பட,

அந்த நிகழ்ச்சியை பார்க்காமல் வேறு அலைவரிசைகளுக்கு மாற்றி, மாற்றி, திரைப்படங்களையோ,சின்னத்திரை தொடர் நாடகங்களையோ பார்க்கின்ற நிலையே பெரும்பாலான வீடுகளில் நடக்கின்றது. இதனையிட்டு கோபமடை வதைவிட,கவலைப்படவே முடிகிறது. பெண்கள் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே இதில் மாற்றம் ஏற்படும்.

பெண்ணியம் என்றால் என்ன? இன்றைய காலகட்டத்தில் பெண் உரிமை பற்றிப் பேசப்படவேண்டியதன் கரணியம் என்ன? போன்ற கேள்விகளே இன்றைய கருத்தாக்கமாக அமைகிறது.

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் குமுகாய, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையைக் கவனத்தில் கொள்ளும். குமுகாய, பண்பாட்டு, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பே பெண்ணியம். ஆண் பெண் சமத்துவத்தில் அக்கறை காட்டும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு.


பெண்ணியத்தை வரையறுப்பதில் பெண்ணியவாதிகளிடையே பல கருத்து வேறுபாடுகள் உண்டு.

பெண்களின் குமுகாய நிலையை உயர்த்துவதை நோக்காகக் கொண்ட கருத்தியல்தான் பெண்ணிலைவாதக் கருத்தியல் ஆகும். குமுகாய அரசியல், பொருளாதார ரீதியில் ஆண்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும், அவர்கள் தாமாக முடிவெடுத்து அவர்கள் விருப்பப்படி வாழ வேண்டும் என்பதே பெண்ணிலைவாதமாகும். பெண்கள் பக்கசார்பாக நடத்தப்படுவதை எதிர்த்து, சமதத்துவத்திற்காகப்பாடுபடும் இயக்கம் பெண்ணிலைவாத இயக்கமாகும்.

பெண்ணியம் என்பதை சொல்லிய வரையறைக்குள் அடக்க முடியாது என்றாலும், பெண் என்பவர் அனைத்துத் துறை, நிலை, தரப்புகளிலும் குமுகாய, பொருளாதார, அரசியல் மேம்பாடு அடைதலே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும் என்று குறிப்பிடலாம். பெண்களின் அனைத்து வகையான மேம்பாடுகளையும் அடைவதற்கான உந்துவிசைகளாக பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் அமைகின்றன.

இன்று பல்துறைகளிலும் பெண்கள் கால் பதித்து சாதனை படைத்துள்ளார்களே? அவர்கள் மேம்பாடு அடையவில்லையா? போன்ற கேள்விகள் எழலாம். இவ்வாறான கேள்விகளுக்கு பதிலைத் தேடும் போது மேலும் பல கேள்விகளே எழுகின்றன.

உலகில் சாதனை படைத்த பெண்



களாகக் கூறப்படும் பெண்கள் எவ்வாறு பார்க்கப்பட்டார்கள் ?

அவர்கள் முன்னிலைக்கு வருவதற்கு ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட குடும்ப, குமுகாய பின்னணிகள் எவ்வாறு துணை புரிந்தன? எத்தகைய சூழ்நிலையில் அவை சாத்தியமாகின ? என கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்?

அதிக பலம் உள்ளவர்களாக, இறுக்கமான மனதுடன் முடிவெடுக்கும் திறன் உடையவர்களாக, அரசியல் பொருளாதார வரலாற்றுப் பின்புலம் உடையவர்களாக, ஒரு ஆண் என்பவன் எவ்வாறு இருப்பான் என குமுகாயம் கூறுகிறதோ, அத்தகைய தன்மை உடையவர்களாக இருந்தவர்களையே சாதனை வீராங்கனைகளாக குமுகாயம் ஏற்றுக் கொண்டது.




பொருளாதார பலம் அற்ற, அரசியல் வரலாற்றுப் பின்புலம் அற்ற, அன்றாட வாழ்க்கைக்காக உழைக்கும் ஒரு பெண் திடமாக எழுந்து நின்றால், அவளை இந்த குமுகாயம் வரவேற்று, ஊக்குவிக்க என்றுமே தயாராக இருந்ததில்லை. அப்படியானவர்கள் குமுகாயக் கட்டமைப்பிலிருந்து தள்ளி வைக்கப்படுகிறார்கள்.

எனவே "பெண்கள் சாதனை படைக்கிறார்கள் ...." என்றால், "யார் சாதனை படைக்கிறார்கள்?

எத்தகையவர்களின் வளர்ச்சி எழுச்சியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது ? "என்பதை நாம் உற்று நோக்க வேண்டும்.

பெண் சாதனையாளர்கள் பட்டியலை விடுவோம் மனித வாழ்க்கையில் ஒரு இலக்கை அடைவதற்கு ஒரு ஆண் எதிர்கொள்ளும் சவால்களை விட பல மடங்கு அதிக சவால்களை ஒரு பெண் எதிர்நோக்க வேண்டியுள்ளது. பெண்ணைப் போகப் பொருளாகப் பார்க்கும் ஆண் ஆதிக்கக்கண்களின் வக்கிரங்கள், குழந்தை பெறக்கூடிய நிலையிலுள்ள பெண்களுக்கு தொழில் வாய்ப்பு குறைவாக இருத்தல் (சில நிறுவனங்கள் அத்தகையவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட மாட்டாது என்றே தெரிவிக்கின்றன), ஆணைவிடக் குறைந்த ஊதியக் கொடுப்பனவு -2016 இல் Office for National Statistics -UK நடத்திய ஆய்வின்படி ஒரு முழு நேர தொழில் புரியும் ஆணைவிட அதேயளவு நேரம் தொழில் புரியும் பெண் 9.6% குறை

வாகவே ஊதியம் பெறுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஆணுக்கு ஒரு dollar சம்பளம் என்றால் பெண்ணுக்கு அதே வேலைக்கு 79 cents தான் ஊதிய மாகக் கிடைக்கும். (அதிலும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு ஒரு ஊதியம்... வேற்று இனத்தவருக்கு அந்தந்த இனத்துக்கு ஏற்ப வழங்கப்படும்), பெண் என்பத னால் அவருக்கான உடையில் அதிக கட்டுப்பாடுகள் விதித்தல், பெண் என்பத னால் அவரது கருத்துகள் புறக்கணிக் கப்படுதல், பாலியல் வன்தாக்குதலில் பாதிக்கப்பட்ட பெண்ணே குற்றவாளி ஆக்கப்படுதல் (அதாவது ஆணின் உணர்ச்சிகளைத் தூண்டும் அளவுக்கு அந்தப் பெண் உடை அணிந்தாளா ? எந்த நேரத்தில் இது நடந்தது - அது சில வேளை இரவாக இருந்துவிட்டால் அந்த நேரத்தில் இவள் ஏன் அங்கே போனாள்? போன்ற- குற்றம் செய்தவனை விட்டு விட்டு தாக்கப்பட்டவளைக் குற்றவாளி யாக்கும் கேள்விகள் கேட்கப்படுதல்), வீட்டில் கொடுமைபடுத்தப்படுதல், பாலியல் தொழிலாளர்களாக பெண்கள் மட்டுமே குற்றவாளிகளாகச் சுட்டிக் காட்டப்படுதல் ( அவர்களிடம் செல்லும் ஆண்கள் பற்றி எதுவுமே சொல்லப் படுவதில்லை.) போன்ற பல்வேறு விடயங்களில் பெண் இன்னும் தரக் குறைவாகவே நடத்தப்படுகிறார்.

பிறப்பிலேயே பெண்ணாகப் பிறந்து, பெண்ணாகவே தன்னை அடையாளப் படுத்திக் கொள்பவருக்கே சமூகத்தில் இத்தனை போராட்டங்கள் என்றால் பிறப்பில் மாறுபட்ட பாலாக பிறந்து, பெண்ணாகத் தம்மை அடையாளப் படுத்தும் பெண்கள் எதிர் நோக்கும் சமூகாய ஆதிக்கச் சிக்கல்கள் கொடுமை யிலும் கொடுமை. பெண் பிள்ளைகள் பிறந்தாலேஏக்கத்தோடும் வெறுப்போடும் பார்க்கும் சமூகாயம்,திருநங்கையாகத் தன் பிள்ளை பிறந்துவிட்டால்,அந்தப் பிள்ளையைப் புறக்கணித்தே விடு வார்கள். சமூகாயம் பல்வேறு கேலிச் சொற்களால் பழிக்கும். அவர்கள் மீது அவமதிப்புவரிகளை அள்ளி வீசு வார்கள்.

"திருநங்கைகளுக்குசட்டஅங்கீகாரம், சமூகப் பாதுகாப்பு, சமூகஅங்கீகாரம், கல்வி, வேலை வாய்ப்புகிடைக்காத வரை... திருநங்கைகளை அச்சத்துடனும் அந்நியமாகவும் கண்ணில் விழுந்த துரும்புகளாகவுமே இந்தச் சமூகம் எதிர்கொள்ளும்! உங்கள் பக்கத்து இருக்கையில், ஓர் ஆணோ, பெண்ணோ அமர்ந்து இருந்தால், எப்படி உங்களுக்கு எந்தச் சலனத்தையும் பாதிப்பையும் அது ஏற்படுத்தாதோ, அப்படி ஒரு சக பயணியாகவாழ்க்கைப் பயணத்தில் திருநங்கைகளை எதிர் கொள்ளும் பக்குவத்தையேனும் இப்போதைக்குச் சமூகம் வளர்த்துக் கொள்ளவேண்டி இருக்கிறது.

ஒரு சொத்துடமைப் பொருளாக பெண் கணிக்கப்படுவதால்தான் இன, மத,சாதிச்சண்டைகளில் பாலியல் வன்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்கள் சாகடிக்கப்படுகிறார்கள்.

சாதாரணமாக அன்றாட வாழ்விய லில் நடக்கும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டால் பெண்கள் எந்த நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றார்கள் என்பது விளங்கும்.

ஆண் ஒருவன் தற்கொலை செய்து கொண்டால் அந்தப் பழி பெண் மீதே

சுமத்தப்படும். அதேவேளை ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டால் அவளைப் பற்றிய இழிவான கருத்துக்கள் பரப்பப் படும். சாதாரண பெண்ணின் நிலை மட்டுமல்லாமல், குமுகாயத்தில் முக்கிய புகழ்பெற்ற பெண்களுக்கும் இதே நிலைதான்.

அறிவியல் உட்பட உலகின் அனைத்து நிலைகளிலும் பெண்கள் உச்சத்தை தொட்டுவிட்டார்கள். இனியும் பெண்ணுக் கும் விடுதலை வேண்டும் என்று போராடு பவர்கள் அறிவிலிகள்" என கேலி சொல்லும் ஒவ்வொருவரும் இதற்கு என்ன சொல்லப்போகின்றார்கள்?

- பெண்கள் எதில் விடுதலை பெற் றார்கள்?
- உழைப்பில் சம ஊதியம் கிடைக் கிறதா?
- தனித்து தீர்மானம் எடுக்க முடி கிறதா?
- அன்றாட வீட்டுவேலைகளில் தந்தை, கணவன், மகனின் பங்களிப்பு கிடைக்கின்றதா?
- இரவுநேரத்தில் ஒரு பெண்ணால் தனியே வெளியே செல்ல முடியுமா?

விண்ணுந்து செலுத்தினாலும், பாரஊர்தி ஓட்டினாலும், தகவல் தொழில் நுட்பத்தில் சிறந்த வல்லுனராக இருந்தா லும், விளையாட்டு வீராங்கனையாக இருந்தாலும் ஒரு பெண்ணால் இரவில் தனித்து வெளியே செல்லமுடியாது.

இதற்கான காரணம், இன்றும் பெண் போகப்பொருளாகத்தான் கருதப் படுகிறாள்.

பெண் மீதான குடும்ப, குமுகாய, அரச வன்முறைகள் இன்று பரவலாக உலகெங்குமே காணப்படுகின்றது. உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதி யாகவும் பெண் இந்த வன்முறைகளால் பாதிக்கப்படுகிறாள். பெண்மீதான இந்த வன் முறைகள் வீடு, குமுகாயம், நாடு என அனைத்தையுமே பாதிக்கின்றன. ஒரு பெண் இந்த வன்முறையால் பாதிப்புக்குள்ளாகும் போது அவளின் பிள்ளைகள் வாழ்வு சீர் குலைகிறது. இப்படியான பிள்ளைகள் குமுகாயத்தின் மீது வெறுப்பு கொள்கிறார்கள். அந்த வெறுப்பு தவறான பாதைகளை நோக்கி அவர்களை நகர்த்திச்செல்லும். இப்படி பல வழிகளில் அவர்கள் வீட்டுக்கும், குமுகாயத்துக்கும், நாட்டுக்கும் பயன் படாதவர்களாக மாறிவிடுகின்றார்கள்.

உலகிலே, பெண்கள் விடுதலை வானத்தில்சிறகுகள்விரித்துப்பறக்கிறார்கள். பெண்ணியவாதிகள் பேச்செல்லாம் வெறும் கூச்சல்கள்" எனக் கூறுவோரே! ஒரு கணம் நின்று நிதானித்து கண் திறந்து பாருங்கள். தாய் என்றும் பெண் தெய்வ வழிபாடு என்றும் போற்றி வணங்கிக் கொண்டு, ஏனைய பெண்கள் மீது ஆதிக்க வெறித் தனத்தை அரங் கேற்றும் அநீதி தெரியவில்லையா உங்கள் கண்களுக்கு?

பெண்கள் விடுதலை பெறாமல் வீடு, குமுகாயம், நாடு என அனைத்து கட்டமைப்புக்களும் சிறந்து விளங்காது. அதனால் பெணகள் விழிப்புணர்வு பெறவேண்டும். தாம் போற்றுதல் என்னும் பெயரில் அடிமையாக்கப்படுவதை புரிந்து கொள்ளவேண்டும். ஆடை, அணிகலன் கள் மோகத்திலிருந்து தம்மை விடு வித்துக் கொள்ளவேண்டும். கவர்ச்சிப் பொருளாக மட்டும்தான் தாம் கணிக் கப்படுகின்றோம் என்பதனையும், கல்வி, அறிவில் மேம்பட்டவளாக தம்மை கருத இந்த குமுகாயம் தயாரில்லை என்பதனை யும் தெரிந்து கொண்டால் மட்டுமே பெண்களுக்கான விடுதலையின் பாதை திறக்கும்

**-கனலி**

# தமிழை நன்றே பேசுவோம்

மொழிதான் ஒரு இனத்தின் அடையாளம். அடையாளத்தை இழந்தவன் அரை மனிதன். எங்கள் தாய்மொழி தமிழ். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றி,பல படிகளைக் கடந்து செம்மையாக்கப்பட்ட எமது தமிழ்மொழிச்சொற்கள் உலகமொழிகள் பலவற்றிலும் காணப்படுகின்றன.

தமிழ்மொழி இயல்பாகவே தனித்து இயங்கக்கூடியது. அதன் தனித் தன்மைக்கு ஆபத்தை விளைவிக்கும் விதத்தில் கடந்த சில நூற்றாண்டுகளில் ஆங்கிலம்,உருது, போர்த்துக்கீசம்,டச்சு,சமஸ்கிருதம் என பலமொழிச்சொற்கள் அதற்குள் கலந்து விட்டதோடு தமிழ்ச்சொற்களை புறந்தள்ளிவிட்டன. நாங்கள் பேசுவதில் எது தமிழ்ச்சொற்கள் என்பதை எம்மாலேயே புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு பல பிறமொழிச்சொற்கள் கலந்துவிட்டன. இந்த ஆபத்தினை நீக்க வேண்டுமானால் தனித்தமிழில் எழுத,பேச நாங்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

சிலமொழிகள் கலப்பினை இலகுவாக இனங்காணலாம்.

எடுத்துக்காட்டாக போர்த்துக்கீசம்,டச்சு என்ற ஒல்லாந்து மொழி எமது தாய்மொழிச்சொற்களுக்குள் ஊடுருவி புழக்கத்தில் உள்ளதனை சொல்லலாம்.

**இவை போர்த்துக்கீச சொற்கள்:**

அலுமாரி -நிலைப் பேழை
அன்னாசி -செந்தாழம்பழம்
அலவாங்கு -கடப்பாரை
குசினி--- -அடுப்படி

**இவை ஒல்லாந்து சொற்கள்:**

கந்தோர் ------ செயலகம்
தபால் ----- மடல்

பல வடமொழிச் சொற்கள், தமிழில் வடமொழிச் சொற்களை எழுதுவதற்காகவே உருவாக்கப்பட்ட எழுத்துக்களை (ஜ, க்ஷ, ஸ, ஹ, ஸ்ரீ, ஷ) உள்ளடக்கியிருக்கின்றன. இது போன்ற சொற்களை வடமொழிச் சொற்கள் என்று எளிதாக கண்டறிந்துவிடலாம். உதாரணம்: நக்ஷ்டம், ஆக்ஷேபம் போன்ற சொற்கள்.

ஆனால் பல வடமொழிச் சொற்கள் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களை மட்டுமே கொண்டிருக்கின்றன. உதாரணம்: ஆரம்பம், கல்யாணம் போன்ற சொற்கள். இவற்றை பெரும்பாலானோர் தமிழ்ச் சொற்கள் என்றே எண்ணுகின்றனர்.


நாம் அனைவரும் வடமொழிச் சொற்களைத் தவிர்த்து தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த வேண்டும்.

அந்தவகையில் இந்த திங்கள் ஏட்டில் சில தமிழ்சொற்கள்:

**வேற்றுமொழி --- தமிழ்மொழி**

1. மாதம்--- திங்கள்
2. சமூகம்--- குமுகாயம்
3. அகதி--- ஏதிலி
4. அபராதம்-- தண்டம்
5. அபாயம் --- இடர்

# பரதத்தில் முரண்



நாட்டியக் கலைமணி, இரா.குமார், தனது உள்ளத்தைப் பிடித்து உலுப்பும் கேள்விகளை இங்கே பகிர்கின்றார். மாணவச் செல்வங்களுக்கு சரியான பாதையை காட்டும் விதத்தில் பரதநாட்டிய பாடத்திட்டமுறை வகுக்கப்படவில்லையே என்ற அவரின் கவலை இந்த கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

"மாணவர்கள் நாட்டின் கண்கள். அந்த கண்கள் சரியான பார்வையில் இந்த உலகைப் பார்க்கவேண்டும். அதற்கு கல்வி,கலை உட்பட அவர்கள் கற்பவை எல்லாம் உண்மையானதை,சரியானதை சொல்லிக் கொடுக்கவேண்டும்."இந்த ஆசிரியையின் மனக்குமுறல் இவை.

கலைகள் காலத்தின் கண்ணாடிகள். மனிதன் தோன்றிய காலந் தொட்டே கலைகள் காலத்தைப் பதிவு செய்ய ஆரம்பித்துவிட்டன. மனிதனின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அவனை அறியாமலேயே இயற்கையோடு இணைந்த அசைவுகள் ஆகும். இவை கலைகளாக உருவெடுக்கின்றன.

இயற்கையோடு இணைந்து பயணித்த மனிதன், இயற்கையின் இசையைக் கேட்டான். தானும் இசைத்தான். இயற்கையின் அசைவை இரசித்தான். தானும் அசைந்தான். கருத்தைப் புலப்படுத்த கலைகளைப் பயன்படுத்தினான். மொழி வழி நின்று கருத்தினை வெளிப்படுத்தினான். கண் வழி, செவி வழி கருத்துகள் அனை வரையும் சென்றடைய வழி வகுப்பவை கலைகள் ஆகின. இலக்கியம், சித்திரம், ஆடல், பாடல், நாடகம், சிற்பம், கட்டடம் எனக் கலைகள் பலவாகின. உலகில் எத்தனை கலைகள் உள்ளனவோ அத்தனை கலைகளும் காலத்தைப் பதிவு செய்கின்றன. வரலாற்றுப் பக்கங் களை புரட்டுகின்றன. வரலாற்றின் கண்ணாடிகளாக விளங்கும் கலைகள் மனிதனது வாழிட சூழலுக்கும் தேவை களுக்கும் ஏற்ப அமைகின்றன.

தமிழர்களாகிய எமக்கு நுண்கலை களில் ஒன்றாகிய ஆடற்கலை என்றதுமே

பரதநாட்டியமே எமது கண் முன் நடனம் ஆடும். பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக இடம்பெறும் பரதநாட்டியம் பற்றிய ஓர் பார்வையாகவே இவ்வாக்கம் இடம் பெறுகிறது.

மன்னர் ஆட்சிக் காலத்தில் "சதிர்" என்றும் "சின்னமேளம்" என்றும் அழைக்கப்பட்டு, தேவதாசிகளால் கோயில் களில் ஆடப்பட்ட ஆடற்கலையே, 1947 இல் தேவதாசி அமைப்பு சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்ட பின்னர் மறுமலர்ச்சி பெற்ற பரதநாட்டியமாக உருவெடுத்தது. கோயில்களில் பொட்டுக்கட்டி விடப்பட்ட பெண்களே தேவதாசிகள் என அழைக்கப் பட்டனர். அவர்கள் கடவுளையே தங்கள் கணவராகக் கருதி வாழ்ந்தனர். கோயில் தொண்டு புரிபவர்களாக அவர்கள் கருதப்பட்டனர். கோயில் களிலும் அரசவைகளிலும் விழாக் களிலும் சதிராட்டம் இடம்பெற்றது. சிலப்பதிகாரம் அக்கால ஆடற்கலையின் செழுமை கூறும்.

கோயில்களில் தொண்டு செய்வ தோடு, மன்னர்களுக்கும் கோயில் சார்ந்த மேலாளர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டிய நிலையில் தேவதாசிகள் வாழ்ந்தனர். காலப் போக்கில் குமுகாயச் சீரழிவுகள் ஏற்பட ஆரம்பித்தன. அவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப் பட்டார்கள்.

"காசில்லாதவன் கடவுளானாலும் கதவைச் சாத்தடி" என்னும் கூற்றும்

"காசிருந்தால் இங்கே வாரும் சும்மா கடன் என்றால் வந்த வழி பாரும்" என அக்காலப் பதம் ஒன்றிலே வரும் வரிகளும் தேவதாசிகளின் மனதை வெளிப்படுத்துவதை நாம் அறியலாம். இவ்வாறான நிலைகள் குமுகாயச் சீரழிவுகளுக்கு வழி கோலியதாலேயே தேவதாசிகள் பொட்டுக்கட்டி கோயில் களுக்குக் கொடுக்கப்படும் முறையும் கோயில்களில் நடனம் ஆடும் முறையும் சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டன. கலாநிதி முத்துலட்சுமி அம்மையார், செல்வி ராமதீர்த்தம்மாள், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத் தினர் இந்தத் தடைச் சட்டம் நடை முறைப் படுத்தப்படுவதற்காக அரும்பாடு பட்டனர். கோயில்களில் நடனம் ஆடுவது நிறுத்தப்பட்ட பின்னர் நாட்டியக் கலை யும் நலிவு பெறத் தொடங்கியது.

இவ்வாறு ஏற்பட்ட நலிவின் காரணமாக நாட்டியம் அழிவு நிலையை எட்டவில்லை. இப்போது வெளிவந்துள்ள பதிவுகளின் படி கிருஷ்ண அய்யர், ருக்மணிதேவி அருண்டேல் போன்றோரின் முயற்சி யினால் ஒரு அரங்கக்கலையாக வடிவம் பெற்று, பரதநாட்டியம் என்னும் பெயருடன் உயிர்த்தெழ ஆரம்பித்தது. மேல்தட்டு வர்க்கத்தினராகக் கூறப்பட் டோரால் முன்னெடுக்கப்பட்டதாலேயோ என்னவோ பரதநாட்டியத்தை உயிர்த்தெழ வைப்பது சற்று இலகுவாயிற்றோ என்ற ஐயமும் எழுகிறது.

ருக்மணிதேவி அவர்கள் "கலா சேத்ரா" என்னும் நிறுவனத்தை உரு வாக்கி, இக்கலையை நிறுவனமயமாக் கப்பட்ட கற்கை நெறியாக மாற்றினார். கலாசேத்ராவில் பிற நாடுகளில் இருந்தும் பலர் வந்து கற்கத் தொடங்கினர். சமஸ்கிருத ஸ்லோகங்கள் தமிழ் நாட்டின் நடனமாகக் கூறப்படும் பரத நாட்டியத்தில் பெரும்பாலான இடத்தைப் பிடித்ததை நாம் இங்கே கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டுக்குரிய ஒரு நடனத்தில் எவ்வாறு யாராலும் பேசப்

படாத மொழியான சமஸ்கிருதம் இடம் பிடித்தது என்பதை பிறிதொரு ஆக்கத்தில் பார்ப்போம்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியோடு வளர்ந்து வந்த பரதநாட்டியமானது இப்போது உலகெங்கும் தழைத்தோங்கி உள்ளது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு மிகச் சிறு அகவையிலேயே பரதம்கற்பிக்க ஆரம்பிக்கின்றனர். அதற்காக நடன ஆசிரியர்களை அணுகுகின்றனர். பிஞ்சுப் பாதங்களில் சலங்கைகள் கட்டி ஆடும் அழகைக் கண்டு மெய் சிலிர்கின்றனர்.



பரதநாட்டியக் கலைஞர் தன் மனதை ஒருமுகப் படுத்தி, சொல்ல வரும் கருத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்துவதற்காக பல பயிற்சிகள் செய்ய வேண்டும். தன் உடலின் அகமும் புறமும் ஒருங்கிணைந்த அசைவுகளின் ஊடாக மிகத் துல்லியமாக கருத்தைப் புலப்படுத்த வேண்டுமானால் நீண்ட கால பயிற்சிகள் வேண்டும். ஐம்புலன்களையும் ஒருங்கிணைத்து இசையோடும் தாளத்தோடும் ஒன்றித்து, தான் சொல்ல வரும் கருத்தை, பார்ப்போருக்கு நன்கு புரியும்படி நடனம் ஆடுவதே பரத நாட்டியக் கலைஞரின் சிறப்பாகும்.

இந்த இடத்தில் தான் நாம் சற்று நின்று நிதானித்து இக்கட்டுரையை வாசிக்க வேண்டும்.

பள்ளிக்கூடங்களிலும் தனிப்பட்ட ஆசிரியர்களாலும் கற்றுக் கொடுக்கப்படும் பரதநாட்டிய பாடத்திட்டத்திலுள்ள பல விடயங்கள் இன்றைய காலத்தில் பொருத்தமானவை தானா ? அல்லது இவை மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையா? என்பதை பெற்றோரும் ஆசிரியர்களும் கல்விக் குழுவினரும் சிந்திக்க வேண்டும் என்பதையே இவ்வாக்கம் வலியுறுத்த விரும்புகிறது.

அடிப்படை அடவுகள், அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனம், அஷ்டபதி, ஜாவளி, தில்லானா என நாட்டிய மார்க்கம் அமைக்கப்பட்டுள்ளது. அறிமுறையில் தியானஸ் லோகம், ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகள், அவற்றின் விநியோகங்கள், கண், தலை, கழுத்து, கால் அசைவுகள் என பல விடயங்கள் பாடத்திட்டத்தில் உள்ளன. இவற்றை சற்று விரிவாகப் பார்ப்போம்.

அடவுகள் ஆரம்பப் பயிற்சிக்கானவை. அலாரிப்பு, ஜதிஸ்வரம் ஆகிய உருப்படிகள் இசையோடும் தாளத்தோடும் இணைந்து ஆடுவதற்கானவை. இவ்வுருப்படிகள் கருத்தைப் புலப்படுத்தாத முறையே தத்தகார, ஸ்வர கோர்வைகளைக் கொண்டிருக்கும்.

அடுத்ததாக வரும் உருப்படி சப்தம். இதில் தான் முதன் முதலாக "சாகித்யம்"

என்று சொல்லப்படும் கருத்தைப் புலப்படுத்தும் சொல்லியங்கள் சேர்க்கப் படுகின்றன. இந்த சாகித்யங்கள் கடவுளையோ மன்னனையோ புகழ்ந்து பாடுவதாக அமையும். அதிகமாக நமது மாணவர்கள் கற்கும் சப்தங்களாவன - ஆயர் சேரியர் ....., சரசி ஜாக்சலு ஜலக மாடே, தில்லையம்பலம் போன்றவை. இதில் தில்லையம்பலம் சப்தத்தினை எடுத்துக் கொள்வோம். "தில்லையம்பலம் தன்னிலே நடம் செய்திடும் நடராஜன் என் எல்லையற்ற காதல் நெஞ்சினை எப்போ தான் அறிவாரோ ? " என ஆரம்பமாகிறது

முதலாவது கண்டிகை. பக்தியோடு



இணைந்த நடனம் என்று நீங்கள் நினைக்கலாம். மூன்றாவது கண்டிகையில்

"சொப்பனத்தில் கண்ட தெய்வம் என் சொந்த நாயகன் ஆவாரோ?

அற்ப பேதை என் ஆசை அம்பலத் தாடுவோன் உள்ளம் சேருமோ "

என்று வருகிறது. அதற்கான அபிநயமும் கடவுளை தன் நாயகனாக எண்ணி நாயகி உருகுவது போலவும் திருமணக் காட்சிகளை தனது மனக் கண்ணில் அவள் காணுவது போலவும் பின்னர் எல்லாமே கனவுதானா என நாயகி அழுது புலம்புவதுமாக அபிநயம் அமைகிறது. இந்த விடயங்களை எல்லாம் பன்னிரண்டு அகவையில் சப்தம் பயிலும் ஒரு மாணவருக்கு சொல்லிக் கொடுப்பது எந்த வகையில் பொருந்தும்? "ஆயர் சேரியர்" என்ற சப்தத்தினை நோக்குவோம். "ஆயர் சேரியர் அறிந்திடாமலும் அன்னை தந்தையர் தெரிந்திடாமலும் நேயர் கோபியர் நெஞ்சம் கவர்ந்திட மாயவன் குழல் ஊதுறான்." இதில் என்ன பண்பினை நாம் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கிறோம்? "தாய் தந்தையருக்குத் தெரியாமல் கடவுளே தவறு செய்துள்ளார். அப்படியானால் நாம் செய்தால் தவறில்லை " என அந்த சிறுவர் உள்ளம் நினைக்காதா? கடவுளாகிய கண்ணன் பாடல்கள் என்று வரும்போதே "குறும்புகள்" என்று நாட்டிய ஆசிரியர்கள் சிந்தித்து வடிவமைப்பார்கள். பெண்கள் குளிக்கப் போனால் அவர்களின் உடைகளை கண்ணன் திருடுவது போலவும் பெண்கள் ஆடையின்றி தவிப்பது போலவும் கூட காட்சிகள் வருகின்றன. இவற்றினூடாக இந்த பிள்ளைகளுக்கு நாம் என்ன விடயத்தைப் போதிக்கிறோம் என்று நாம் சிந்திக்க வேண்டுமல்லவா?

அடுத்ததாக வர்ணம், இது தாள சொற்கட்டுகளாலான தீர்மானங்களும் சாகித்தியங்களும் மாறி மாறி வரும் உருப்படி வகையாகும். ஒரு அரங்கேற்றத் தில் அரங்கேற்றும் கலைஞரின் திறமையை, வலிமையை உணர்த்தும் ஒரு அழகான நாட்டிய உருப்படி. நமது மாணவர்கள் அதிகமாக கற்கும் வர்ணங்களாவன: நீ இந்த மாயம் ......, சகியே இந்த வேளையில்......, மனவி செகோன ..... ஆகியவற்றை கூறலாம்.

இவை எல்லாம் நாயக, நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டவை. "பாயும் மாறன் அம்பினால் துன்புறும் பாவையைக் கண்ணால் பாராமல் இன்னும்" என்னும் வரிகள் 'நீ இந்த மாயம்' வர்ணத்தில் வருகின்றன. காதலின் கடவுளான மன்மதன் அம்பு பட்டு தவிக்கும் பெண்ணின் உணர்வை இவ்வரிகள் சித்தரிக்கின்றன. அநேகமாக நடன பாட தேர்வில் தரம் நான்கு கற்கும் மாணவி அல்லது மாணவன் இந்த உருப்படியைக் கற்க வேண்டும். சிறு வயதிலேயே தம் பிள்ளைகளுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுக்கும் பெற்றோர் தன் பிள்ளை விரைவாக தேர்வு எழுதுவதையே விரும்புவர். அப்படியானால் இந்த வர்ணத்தை ஒரு சிறு வயது பிள்ளைக்கு எவ்வாறு புரிய வைத்து, மன உணர்வை வெளிப்படுத்த வைப்பது?

சகியே என்னும் வர்ணம், விரக தாபத்தில் ஏங்கும் பெண்ணின் உணர்வு களை வெளிப்படுத்தும் சாகித்தியங்களைக் கொண்டுள்ளது. பக்தி என்னும் பெயரில் இவற்றை எல்லாம் நாம் மூடி மறைத்து விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அடுத்ததாக பதம்,

"நேற்றந்தி நேரத்திலே நீராடும் கரை தனிலே

நெருங்கி எனை ஜாடை காட்டி அழைத்தது யாரோ ஸ்வாமி?

முந்தா நாள் அந்தி நேரத்தில் சொந்தம் போல் கிட்டே வந்து

முத்து முத்தாய் சரசமாடி மோகமதைத் தந்து

மன்னவா உன் நினைவு கொண்டு அன்னமுண்டொரு மாதமுண்டு

வாருமையா என் துரையே! தீருமையா என் கவலை "

இவ்வாறு கடவுளை தன் நாயகனாக எண்ணி பாடும் பாடல் களையே பதம் என்னும் உருப்படிக்குள் அடக்கி விடுகிறார்கள்.

இன்னுமொரு பதம், தோடிராகத்தில் அமைந்துள்ளது.

*பல்லவி:*

இது வேளை பிராணேசன் வருவார் - என்னை

மது உண்ட வண்டென மயங்கிடச் செய்திடுவார்.

*அனுபல்லவி:*

அதிரூபவதியெனவே மனதாரப் புகழ்வார் - இங்கிதமாகத்

தழுவியே அன்பு மழை பொழிவார்.

*சரணம்:*

மெத்தென்ற மலர் மஞ்சம் அளிப்பேன் - மிக

புத்தம் புதிய பண்ணிசைப்பேன் - நல்ல

முத்தாரங்கள் அணிந்து அலங்காரமாய் - வேளூர்

முத்துக்குமாரனையே விரைந்தோடி அடைந்திடுவேன் .

பக்தி என்னும் பெயரில் இவ்வாறான உணர்வுகளை வெளிப்படுத்தும் பதங்களை நம் மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பது பற்றி நாம் பொறுப்புடன் சிந்திக்கத் தவறி விட்டோமோ என எண்ணத் தோன்றுகிறது. பள்ளி மாணவர்கள் மட்டுமன்றி பல்கலைக் கழக மாணவர்களுக்கும்கூட இத்தகைய பதங்கள் தேவைதானா என்பதை அறிவார்ந்த கல்விக் குழுவினர் சிந்திக்க வேண்டும்.

அதே போன்று தான் ஜாவளி என்னும் உருப்படியும் அமைக்கப் பட்டுள்ளது.

"வழி மறந்தீரோ ஐயா ...என ஆரம்பிக்கும் ஜாவளியில் "பழி பேசி ஏசவே நானோ- அன்பு மொழி பேசி கொஞ்சவோ அவளோ ..." என நாயகி கோபமாக நாயகனைப் பார்த்துக் கேட்பதாக அமைகிறது. இதில் எங்கே பக்தி இருக்கிறது எனப் புரியவில்லை.

பரதநாட்டியத்தில் நாயகிகள் எட்டு வகைப்படுவர் என சொல்லப்பட்டிருக்கிறது.

1. வாசகசஜ்ஜிகா - தன்னை அலங்கரித்துக் கொண்டு தனது காதலன் மகிழ்ச்சி அடையக்கூடிய சூழலை உருவாக்கி, அவனுக்காக வாசலில் காத்திருப்பவள்.

2. விரகோத் கண்டிதா - கணவனைப் பிரிந்த துயரில் மனம் வாடி, அழுது புலம்பும் நாயகி.

3. ஸ்வாதீன பதிகா - தனது கணவனிடம் பக்தியும் நம்பிக்கையும் கொண்டவள்.

4. கலகாந்தரிதா - கலகத்தால் கணவனைக் கோபித்துத் துரத்திய பின்பு வருந்துபவள்.

5. கண்டிதா - தனது கணவனின் நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டு பிடித்து ஆத்திரப்படுவதுடன் மற்றப் பெண் மீது பொறாமைப்படுபவள்.

6. விப்ரலப்தா - தனது காதலன், தனக்கு வாக்களித்தபடி குறிப்பிட்ட நேரத்திற்கு வராமையால் மன முடைந்து இருப்பவள்.

உதாரணமாக "வருவேன் வருவேன் என்று வாக்குறுதி அளித்த வடிவேலன் வருவானோடி ?" என்ற பதத்தில் வரும் நாயகி.

7. ப்ரோசித பத்ரிகா - நெடுந்தூரம் சென்ற நாயகனின் பிரிவால் வருந்தி, நாட்களை எண்ணிக் கொண்டிருப்பவள்.

8. அபிசாரிகா - மன எழுச்சியுடன் நாயகனை சந்திக்கச் செல்பவள்.

இந்த "அஷ்ட வித நாயகிகள்" நமது மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ளது. இந்நாயகிகளின் தன்மையை விளக்கும் பதமும் உள்ளது. அரங்கேற்றங்களில் அதிகமாக நடனம் ஆடப்படும். இந்த எட்டு வகை நாயகிகள் பற்றி கற்பிப்பது என்பது பெண்களை இழிவு படுத்தும் ஒரு விடயமாக நாம் ஏன் பார்க்க மறந்தோம்?

நாயகர்களை நான்கு விதமாகக் கூறும் பரத சாஸ்திரம் என்ன அடிப்படையில் அவர்களைப் பிரித்துள்ளது என்று பார்த்தல் இங்கே அவசியமாகிறது.

1. திரோதாத்தன் - தன்னடக்கம் உள்ளவன், தீய குணங்கள் அற்றவன், உடலுறுதி,வீரம்,இரக்கம்,அறிவு,ஆகிய குணங்களுடையவன். உத்தமன். உதாரணம் - ராமன்

2. திரோத்ததன் - கர்வம், தற்பெருமை, கோபம், அவசரபுத்தி உடையவன். மற்றவர்கள் தனக்குக் கீழ் படிந்து நடக்க வேண்டும் என எண்ணுபவன். உதாரணம்: இராவணன், துரியோதனன்

( இராவணன் என்னும் தமிழ் மன்னனை தீயவனாகவும் ராமன் என்னும் ஆரிய இனத்தவனை சிறந்தவனாகவும் காட்டும் வரலாற்று சூது பற்றி பிறிதொரு இடத்தில் பார்ப்போம். )

3. தீரலலிதன் - தன்னடக்க முள்ளவன், கவலையும் யோசனையும் இல்லாதவன், மகிழ்ச்சியானவன்.

உதாரணம் - கிருஷ்ணன்

4. தீர சாந்தன் - தன்னடக்கம், கட்டுப்பாடு, அமைதி, சாந்தம், பொறுமை உடையவன்.

உதாரணம் - புத்தர்.

ஆண்களைப் பற்றிக் கூறும் போது

அவர்களின் வீர தீரக் குணங்களையும் பெண்களைப் பற்றிக் கூறும் போது எப்போதும் நாயகனுக்காக ஏங்குவதையும் பணிவிடை செய்வதையும் பற்றிக் கூறுவதையும் நாம் உற்று நோக்க வேண்டும்.

அடுத்து அறிமுறைத் தேர்வில் பாத்திர லட்சணம் பற்றி ஒரு கேள்வி தேர்வுத் தாள்களில் வரும். ஒரு நடனம் ஆடும் பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என அபிநய தர்ப்பணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

"தன்வீ ரூபவதி ஸ்யாமா ... என ஆரம்பிக்கிறது ஸ்லோகம்.

"நடனம் ஆடும் பெண் சிவந்த மேனியுடன் அழகானவளாகவும் அளவான உடற்கட்டுடையவளாகவும் இளமையானவளாகவும் வட்ட வடிவான உத்தம மார்பகங்களை உடையவளாகவும் இருத்தல் வேண்டும். அறிவு உரம் பெற்றவளாகவும் மனோகரம், தாளசுர ஞானம், அழகிய பெரிய கண்கள் உடையவளாகவும் ஹஸ்த அங்க வின்யாசங்களை நன்கு தெரிந்தவளாகவும் தாள சுருதி தவறாது சொற்களை ஓங்கி அடித்த பிறகு தான் கற்ற கல்வி மறவாமல், சாஸ்திர விசாரணையில் கருத்தை ஊன்றி, பித்து நோய், சலிப்பு, மெலிவு, பின் செல்லுதல் முதலிய குற்றங்கள் இல்லாமல் பக்தியுடன் மதுர வாசகம் பேசி, இசைப் பாடலைப் பாடும் இனிய குரல் வளம் பெற்றவளாகவும் இருத்தல் வேண்டும். கோபமில்லாமல் துறவிகள், தெய்வம், ஆசான் இவர்களிடத்தில் பக்தி கொண்டவளாகவும் இருப்பவளே உத்தம நடிகைக்கு உரியவள்." என்பதே பரதநாட்டியம் கற்கும் மாணவர்களின் பாடத் திட்டத்தில் உள்ள பாத்திர லட்சணம் ஆகும்.

இவை போன்றே அலபத்ம, காங்கூல ஹஸ்த விநியோகங்களில் பெண்களில் மார்பகத்தைக் காட்டுவதற்கு இம்முத்திரைகள் பயன்படுத்தப் படுவதாகச் சொல்லப்படுகிறது.

"சாதிகள் இல்லையடி பாப்பா - குல
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்ற பாரதி பாடலை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் நாமே பரதநாட்டியத்தில் ஜாதி ஹஸ்தங்களையும் கற்பிக்கிறோம்.

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வகையாக மனிதர்கள் சாதியால் பிரிக்கப் படுகிறார்கள் என்று சொல்லிக் கொடுக்க வேண்டிய அவல நிலையைப் பாடத் திட்டத்தில் காண்கிறோம்.

ஆக மொத்தத்தில், தேவதாசி முறை சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்ட பின்னரும் கூட, பக்தி என்னும் பெயரில் ஏற்கனவே திருமணமான கடவுளரைத் தம் நாயகர்களாக எண்ணி நடனம் ஆடும் நிலை, பரதநாட்டியம் என்னும் பெயரில் தொடரப்படுவதை அறிவு சார் தமிழ் மக்கள் நன்குணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். பெண்களை இழிவு படுத்தும் கருத்துகள் நீக்கப்பட வேண்டும்.

அண்மைக் காலங்களில் தொலைக் காட்சிகளில் இடம்பெறும் பாடல் போட்டிகளில் சினிமாவில் இடம்பெற்ற சிருங்கார ரசம் அளவுக்கதிகமாக காணப்படும் பாடல்களை, அதன் பொருள் என்னவென்றே அறியமுடியாத சிறிய அகவையான பிள்ளைகள் பாடியபின் நடுவர்கள் கூறுவதை இந்த இடத்தில் நினைவு கூற விரும்புகிறேன். வயது வந்தவர்களால் மட்டுமே புரிந்து

கொள்ளக் கூடிய வரிகளைக் கூறி, அதனை இன்னும் சற்றுத் திறமையாகப் பாடி இருக்கலாம் என்று விமர்சனம் செய்வார்கள். அதனைப் பார்க்கும் போது கோபக் கனல் மனதில் பொங்கி எழும்.

கலைகள் சிறப்பானவை. கருத்து களை வெளிப்படுத்த மிகச் சிறந்த ஊடகங்கள். ஆனால் அக்கலைகளைக் காலத் தேவை கருதி நாம் சீரமைத்துக் கொள்கிறோமா என்று சிந்திக்க வேண்டும். நாடு, மொழி, மக்கள், சுற்றுச் சூழல் என எவ்வளவோ சம கால விடயங்கள்



இக்கலைகளினூடாக வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியம். இதனூடாக ஒரு குமுகாயப் பொறுப்புள்ள நாளைய தலைமுறையினரை உருவாக்க முடியும். ஆங்காங்கே நிகழ்ச்சிகளில் முற்போக்கு சிந்தனை உள்ள நடன ஆசிரியர்கள் குமுகாய அக்கறையோடு தங்கள் மாணவர்கள் மூலம் மிகச்சிறந்த படைப்புகளை அரங்கேற்றுகிறார்கள். ஆனாலும், பள்ளிகளில், பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டத்தில் மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தும் போதுதான் அது பெருமளவு மாற்றத்தை உருவாக்கும். பாடத் திட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படா விட்டால் எம்மைப் போன்ற நடன ஆசியர்கள் பலர், தவறான சில விடயங்களை, அவை தவறு எனத் தெரிந்தும், மனவலியோடு மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாகிறார்கள்.

உலகின் மிக மூத்த மொழியாகிய தமிழ் மொழியை எமது தாய்மொழியாகக் கொண்ட எமக்கென்று உயரிய பண்பாடு உண்டு. பண்பாட்டில் சிறந்து விளங்கும் தமிழர்களாகிய நாம், எதிர்கால சந்ததியை நல்வழிப் படுத்துவதைக் கருத்திற் கொண்டு, பரதநாட்டியம் என்னும் கலை வடிவத்தை மாணவர்கள் கசடற கற்க வழி சமைக்க வேண்டும். இதற்கான முழுப்பொறுப்பும் பரதக் கலைக் கல்வியின் துறைசார்ந்த கல்வியியலாளர்களுக்கு உண்டு என்பதை மனங்கொள்வோமாக.

(விமர்சனங்களை வரவேற்கிறோம்)

## குறிப்புகள் பெற உதவிய நூல்கள்

1. தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் - பேராசிரியர் வி. சிவசாமி
2. நிருத்திய கீத மாலா - ராஜீ நாராயண்
3. பரதநாட்டியம் - எஸ். செல்வேந்திரன்
4. பரதநாட்டியம் - நாட்டியக்கலைமணி பிரேமலாதேவி ரவீந்திரன்
5. Understanding bharata natyam -Mirnalini Sarabhai

# தேனீக்கள் உலகை காப்பாற்றிவருவது பற்றி தெரியுமா?





தேனீக்கள் மட்டும் இந்த மண்ணில் இருந்து மறைந்துவிட்டால், 'மனிதன் வாழ்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு மேல் மிச்சம் இருக்காது!' என்று சொல்லியிருக்கிறார் அல்பேர்ட் ஐன்ஸ்டீன்.

இனிக்கும் செய்தியல்ல.... இது! தேனீ... உலகின் மிக வியப்பான, நுணுக்கமான தொழில் புரியும் உயிரினம். அந்தத் தேனீக்களைப் பற்றி ஆச்சரியமான மற்றும் அதிர்ச்சியான விடயத்தைத் தெரிந்து கொள்ளலாமா.............?

முதலில்... ஆச்சரியம். மிக மிக சிறிய உருவில் இருக்கும் தேனீதான் உலகின் மிகச் சிறந்த மகரந்தச் சேர்க்கையாளர்.தென்னை, வாழை, பூசணி, அப்பிள்(அரத்திப்பழம்), பீச்(குழிப்பேரி) போன்ற பல பழவகைகள் கோப்பி, ஏலக்காய்,பருத்தி போன்ற செடிகள் மற்றும் உணவு தானியங்கள் எனப் பல கோடி மகரந்தச் சேர்க்கைகளுக்குக் காரணமாக இருக்கும் தேனீக்கள்தான், உலகின் 80 விழுக்காடு உணவுப் பொருள்களின் பெருக்கத்துக்கும் காரணம்.

தேனீயின் தகவல் பரிமாற்ற முறை, ஸ்கைப் (காயலை) வாட்ஸ்அப் (புலனம்) முறைகளை விடத் துல்லியமானது. யானை, ஆமைகளுக்கு நினைவாற்றல் அதிகம் என்போம். ஆனால்,அவற்றைவிடவும் கூர்மையான நினைவாற்றல் கொண்டவை தேனீக்கள். இதுபோல இன்னும் பல ஆச்சரியங்கள் அந்த சின்னஞ்சிறிய உடம்பில் இருக்கின்றன.

ஆனால், அதிர்ச்சி தரும் விடயம்... அந்தத் தேனீக்கள் இப்போது 'அழிந்துவரும் உயிரினங்கள்' பட்டியலில் இடம்பிடித்திருக்கின்றன என்பதாகும்.

ஆம்... தற்பொழுது உலகை உலுக்கும் செய்திகளுள் இதுவும் ஒன்று. ஒட்டுமொத்த மக்கள் தொகையாலும் பூமிக்கு விளையாத நன்மை, ஒரே ஒரு தேனீயால் விளையும்.அந்த அளவுக்குத் தேனீயின் ஒவ்வொரு சிறகசைப்பும் பூமிப் பந்தில் பசுமைப் போர்வையைப் போர்த்துகிறது. தேனீக்களின் வாழ்க்கைமுறை பற்றி தெரிந்து கொண்டால்தான், அது காடுகளின் பெருக்கத்துக்கு எப்பேர்ப்பட்ட நன்மை விளைவிக்கிறது



இராணியோடு புணர்வதும் தேன் கூட்டைப் பாதுகாப்பதும் கடமை. மற்ற எல்லா வேலைகளும் பணித் தேனீக்கள் பொறுப்பு. உணவுச் சேகரிப்பு, தேன்கூடு கட்டுவது, தேனைப் பக்குவப்படுத்துவது, கூட்டைத் தூய்மையாக பேணிப் பாதுகாத்து எல்லா வேலைகளையும் பணித் தேனீக்கள்தான் கவனிக்கும்.

என்று புரியும்.
தேனீக்களின் வாழ்வியல் குணங்களைப் பற்றி கேட்டதும், மிகுந்தஈடுபாட்டுடன் பட்டியலிட்டார் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சிகள் துறையைச் சேர்ந்த டாக்டர் எம்.ஆர்.சிறீனிவாசன்.

உலகத்தில் ஐந்து வகை தேனீக்கள் இருக்கின்றது.மலைத் தேனீ, இந்தியத் தேனீ, கொம்புத்தேனீ, இத்தாலியன் தேனீ,கொடுக்கில்லாத் தேனீ.இதில் இந்திய, இத்தாலிய மற்றும் கொடுக்கில்லாத் தேனீக்களைத் தான் மனிதர்கள் வளர்க்கிறார்கள். மற்ற தேனீக்கள் தானாகவே காட்டில் வளரும்.

ஒரு குடும்பத்தில் ஒரு இராணித் தேனீ, சில நூறு ஆண் தேனீக்கள், பல்லாயிரம்பணித் தேனீக்கள்(பெண்கள்) இருக்கும். இதில் ஆண் தேனீக்களுக்கு 90 நாள்களும், பணித்தேனீக்களுக்கு 70 நாள்களும், இராணித் தேனீக்கு இரண்டு ஆண்டுகள் ஆயுள். இராணித் தேனீக்களுக்கு முட்டையிடுவது மட்டும்தான் வேலை. ஆண் தேனீக்கு,

தேனீக்களின் பொறியியல் அறிவு சிறப்பானது.தேன் கூட்டை அறுங்கோண வடிவத்தில் கட்டும். அப்படி என்றால் தான் ஒரு மில்லிமீற்றர் இடத்தைக் கூட வீணாக்காமல் முழுதாக பயன்படுத்த முடியும். ஆண் தேனீகளுக்குப் பெரிய அறுங்கோண சிறு அறை, பணித் தேனீக்களுக்குச் சிறிய அறுங்கோண சிறு அறை வடிவத்தில் கூடு கட்டிவிட்டு, இராணித் தேனீக்கு உருளை வடிவில் சிறிய அறை கட்டும்.

கூட்டின் கட்டுமானம் திருப்தியாக இருந்தால் மட்டுமே, இராணித் தேனீ அதில் முட்டையிடும். பூக்களின் மகரந்தம், மதுரம்... இரண்டும்தான் தேனீக்களின் உணவு.அப்போதைய பசிக்கு அப்போதே சாப்பிட்டுவிடும். பின்னர் ஏன் தேன் சேகரிக்கிறது? குளிர் காலங்கள், பூ பூக்காத காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத்தான் தேன் சேகரிக்கிறது. தேனீக்கள் தேன் சேகரித்துப் பதப்படுத்துவதுதான் உலகின் சிறந்த

உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பம். தேன் தேடிச் செல்லும் பணித் தேனீக்கள், பூக்களின் மதுரத்தை உறிஞ்சிதன் உடலில் இருக்கும் 'தேன் பை'யில் சேகரித்துக்கொள்ளும். அந்த மதுரம் முழுவதும் செரிக்காமல், தேனீயின் வயிற்றில் இருக்கும் நொதிகளுடன் சேர்ந்து திரவமாக மாறிவிடும். கூட்டுக்குத் திரும்பி வரும் தேனீக்கள், கூட்டின் வாசலில் காத்திருக்கும் தேனீக்களிடம் அந்தத் திரவத்தை ஒப்படைக்கும். அதற்காக ஏப்பமிட்டு ஏப்பமிட்டு தேன் பையில் இருந்து திரவத்தை வெளியில் கொண்டுவந்து எதிர் தேனீயின் வாயில் கொட்டும். ஒரு தேனீ இப்படி 50 முறை கக்கினால்தான், ஒரு துளி தேன் சேரும். கூட்டைப் பேணிப் பாதுகாக்கும் தேனீக்கள் அந்தத் திரவத்தைக் கூட்டின் ஓர் ஓரத்தில் இருக்கும் தேனடையில் கக்கி, அதில் இன்வர்டேஸ் எனும் நொதியைச் சேர்க்கும். பிறகு அந்தத் திரவத்தில் இருந்து நீர்த்தன்மை வற்றிப் போவதற்காக தன் இறகை ஆட்டி ஆட்டி ஆவியாக்கும். பிறகு தேனைப் பாதுகாக்க ஒருவகை மெழுகைப் பூசிவைக்கும். இத்தனை நடைமுறைகளுக்குப் பிறகுதான் நாம் சுவைக்கும் தேன் உருவாகும்.

தேன் எடுப்பவர்கள் கொஞ்சம் தேனை தேனீக்களுக்கு எனக் கூட்டில் விட்டுத்தான் எடுப்பார்கள். அதுதான் தேன் சேகரிக்கும் அறம்.
மேற்படி தேனீக்களின் வேலை நடக்கும்போது இராணித் தேனீ அதை வேடிக்கை மட்டுமே பார்க்கும். இனப்பெருக்கக் காலத்தில் மட்டும்தான் அதற்கு வேலை வரும். அந்தச் சமயத்தில் வேகமாக இராணித் தேனீ உயரத்துக்குப் பறக்கும். அதை எந்த ஆண் தேனீ துரத்திப் பிடிக்கிறதோ, அதோடுதான் இணைசேரும் இராணி.
புணர்ச்சி முடிந்தவுடன் ஆண் இறந்துவிடும்.அதன் பிறகு இராணித் தேனீ முட்டையிட, முட்டையில் இருந்து வரும் தேனீக்களைப் பணித் தேனீக்கள்தான் வளர்ப்புத் தாயாக வளர்க்கும்!

தேன் சேகரிப்பதற்கான தகவல்களை தேனீக்கள் பகிர்ந்துகொள்ளும் முறை அருமையானது.உணவுத் தேவை ஏற்படும்போது 'சாரணர்' ஆக சில தேனீக்கள் முன்னே சென்று பூக்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டுக் கூட்டுக்குத் திரும்பும். கூட்டில் உள்ள மற்ற பணித் தேனீக்களுக்கு சாரணர் தேனீக்கள், தாங்கள்கண்டு பிடித்த தோட்டம் அல்லது சோலை எந்தத் திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை நடனம் ஆடித் தெரிவிக்கும்.


இதில் இரண்டு வகை நடனங்கள் உள்ளன. வட்ட நடனம் மற்றும் வாலாட்டு நடனம். வட்ட நடனத்தில் வட்டமிட்டு வட்டமிட்டு பூக்கள் இருக்கும் தொலைவை மட்டும் குறிக்கும்.

வாலாட்டு நடனத்தில் உயரப் பறந்து வாலை ஆட்டினால், சூரியன் இருக்கும் அதே திசையில் உணவு உள்ளது என்றும், கீழே பறந்து வாலை ஆட்டினால், சூரியனுக்கு நேரெதிர் திசையில் தோட்டம் உள்ளது என்றும் அர்த்தம்.

வாலை வேகமாக ஆட்டினால், சோலை அருகில் உள்ளது என்றும், மெதுவாக ஆட்டினால், தொலைவில் உள்ளது என்றும் பொருள்.
சூரியன், சோலையின் திசை, தங்கள் கூட்டின் இருப்பிடம்... இந்த மூன்றையும் தொடர்புபடுத்தி நடன அசைவுகள் இருக்கும்.
இந்த நுட்பமான நடன இரகசியத்தைக் கண்டுபிடித்த ஆஸ்திரிய கல்விமான் கார்ல்வான் ஃப்ரிஸ்-க்கு (Karl von Frisch) நோபல் பரிசு கொடுத்தார்கள்.

தேன் சேகரிக்கும் போது தேனீக்களின் காலில் ஒட்டிக்கொள்ளும் பூக்களின் மகரந்தம், அடுத்தடுத்து பூக்களின் மேல் உட்காரும்போது, விதவிதமான கூட்டணியுடன் பரவும். இதுதான் காடுகளின், சோலைகளின் பரவலுக்குக் காரணம். தேனீக்களை அதிகம் காடுகளுக்குள் தான் பார்க்க முடியும். காரணம், தேனீக்கள் இருக்கிற இடத்திலேயே இயற்கையாகவே அடர்ந்த காடுகள் உருவாகிவிடும்!

"அழியும் உயிரினம் பட்டியலில் இடம் பிடிக்கும் அளவுக்கு தேனீக்களுக்கு என்ன ஆபத்து?"



"அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகளில் தேனீக்கள் அழிந்துவரும் உயிரினங்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் உலகின் மூன்றில் ஒரு பங்கு தேனீக்கள் அழிந்துவிட்டன. அதாவது, தேனீக்களின் அழிவு சதவிகிதம் 42 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இன்னும் இலங்கை, இந்தியாவில் தேனீக்களுக்கு அந்த அளவுக்குப் பெரிய அபாயம் ஏற்படவில்லை. ஆனால், கூடிய சீக்கிரமே அந்த நிலைமை வரலாம்.
தேனீக்களின் இந்தப் பேரழிவுக்குக் காரணம், Colony Collapse Disorder - சுருக்கமாக... CCD.
அதாவது கூட்டில் இருந்து உணவுசேகரிக்கச் சென்ற பணித் தேனீக்கள் கொத்துக் கொத்தாகக் காணாமல் போய்விடும்.
இராணி மட்டும் கூட்டில் இருக்கும். பணித் தேனீக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒரு கட்டத்தில் இல்லாமலேயே போய்விட்டால், இராணித் தேனீ என்ன செய்வதெனத் தெரியாமல் குழம்பி, விரைவில் இறந்துவிடும். இல்லையெனில் வேறுகூடு தேடிப் போய்விடும். பணித் தேனீக்கள் இப்படித் தொலைந்து போவதற்குப் பல காரணங்கள் உண்டு.
அதில் முக்கியமானது... செயற்கை உரம், பூச்சிக்கொல்லி, மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்.
செயற்கை உரத்தில் உள்ள நியோ நிக்டினாய்ட்ஸ் எனப்படும் வேதிப்பொருள், தேனீக்களின் நரம்பு மண்டலத்தைப் பாதித்து



அவற்றின் நினைவுத்திறனை மழுங்கடித்துவிடும்.
இதனால் கூட்டுக்குத் திரும்பும் வழி மறந்துபோய் பறந்துபோய் அலைந்து திரிந்து இறந்துவிடும்.
மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களின் விதைகளை 'டெர்மினேட்டர்சீட்ஸ்'(terminator seeds) என்பார்கள்.
அதாவது, அந்தப் பயிர்கள் 'விதை தானியத்தை' உருவாக்காது. மலட்டு விதைகளைத் தான் உருவாக்கும்.
அப்படியான மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் மகரந்தத்தில் உள்ள புரோட்டீன் தேனீக்களிடம் செரிமானக் கோளாறுகளை உண்டாக்கி,
ஒரு கட்டத்தில் தேனீக்களைக் கொன்றேவிடும். இப்படி விவசாயத்தில் 'வணிகலாபத்துக்காக' மனிதன் செய்த பல மாற்றங்கள் தேனீக்களை அழிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஐந்து வருடங்களாக விவசாய உற்பத்தி பெருமளவு குறைந்து வருவதற்குக் காரணம் தேனீக்களின் இறப்பு எனத் தெரியவந்தது.
அதனால், அங்கு செயற்கை உரம், மரபணு மாற்றப்பட்ட விதைகள் போன்றவற்றைத் தடை செய்துவிட்டனர்.
வளர்ப்புத் தேனீக்களைப் பிடித்து வந்து தங்கள் வயல்களில் பறக்கவிட்டு மகரந்தச்சேர்க்கை உண்டாக்க முயற்சிக்கிறார்கள்.
பல இலட்சம் தேனீக்களை அழித்த சுயநல மனிதனால், ஒரே ஒரு தேனீயைக்கூட உருவாக்க முடியாது.
இதை நாம் எப்போது உணர்வோம்?" என்று வருத்தமாகச் சொல்கிறார் எம்.ஆர்.சிறீனிவாசன்.

(நன்றி: இணையதளம்)



"If the bee disappeared off the surface of the globe, then man would have only four years of life left. No more bees, no more pollination, no more plants, no more animals, no more man."

# துளைகள்




## சிறுகதை

கதாசிரியர்—திருமதி த. பவானி, கரவெட்டி மத்தி

அஞ்சல்காரரின் மிதியுந்து மணியோசை படலைக்கு வெளியே கிளிங்...கிளிங்... என ஒலிக்கின்றது. காலை வேலைகளை முடித்த அம்மா தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் உட்கார்ந்து பாரத்துக் கொண்டிருந்தார். 'அவவுக்கு அந்த சத்தம் கேட்கவில்லைப் போலும். அக்கா ஜானு கைபேசியில் ஏதோ பாரத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு அதோட இருந்தால் வெளியிலே என்ன நடக்கிறது என்று தெரியாதவாறு ஒன்றிப் போவாள். அஞ்சல்காரரின், சத்தத்தைக் கேட்டு நான்தான் போய்வாங்கவேண்டும்' எனத் தன்னுள்ளே முணுமுணுத்தபடி, விளையாடிக்கொண்டிருந்த 11அகவை அருணி படலைக்குச் சென்று அஞ்சலினை பெற்றுக்கொண்டு, ஓடிப்போய் தாயிடம் அதனைக் கொடுத்தாள்.

அஞ்சலைப் பிரித்த தாய் சாந்தி, பெரிய மகளின் தொலைபேசியின் சர்வதேச வலையமைப்புப் பெற்றதற்கான மாதாந்த உறுதிச் சீட்டு (internet bill) என்ன என்பதைப் பார்த்து அறிந்து கொண்டாள்.

அதில் 4000ரூபாய் இம்மாத விதிப்பனவு எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதனைப பார்த்தவுடன் கடும் கோபம் அடைந்த தாய் சாந்தி "ஜானு" என சத்தமிட்டாள். அவளின் கோப நிலையைக் கூட அறியாத மகள் ஜானு "என்னம்மா கொஞ்சம் பொறுங்கோ. இந்த (message) மெசேஜ்சை அனுப்பிப் போட்டு வாறன்" என்றாள். பொறுமையிழந்த சாந்தி, மகள் அருகே சென்று கைபேசியை பறித்து எடுத்தாள்.

"அம்மாவின் உருத்திரதாண்டவம் தொடங்கிவிட்டது. எனக்கும் சாத்தல் விழும்" என நினைத்த அருணி ஆங்கிலப்பாடப் பயிற்சியைப் படிப்பது போல் பாசாங்கு செய்துகொண்டு நடப்பதை உன்னிப்பாக அவதானித்தாள்.

"இந்த 'இன்ரர்நெற் பில்' 4000 ரூபாய் வாறதுக்கு அப்படி என்ன செய்தாய் நீ" அம்மாவின் கேள்விக்கு அக்கா என்ன பதில் கூறுவாள் என என் காதுகள் விரிந்து கேட்க ஆரம்பித்தன. அக்கா முதலாம் வருட பல்கலைக்கழக கலைத் துறை மாணவி. வலைத்தளத்தில் தரவிறக்கம் செய்து படிப்பாள்.அது மட்டுமல்லாது game விளையாடுவது. முகநூல் பார்ப்பது, சிநேகிதிகளுடன் கதைப்பது, செய்திகள் பார்ப்பது என கிடைக்கும் நேரம் முழுவதும் தொலை பேசியுடனே வாழுவாள். என்னுடன் பேசக்கூட அவவுக்கு நேரமிருக்காது.

சாந்தியின் குடும்பம் பெண் தலைமைத்துவக் குடும்பம். மகன் மத்திய கிழக்கு நாட்டில் பணிபுரிகிறான். சாந்தி, அவன் அனுப்பும் காசில் குடும்பச் செலவை சிக்கனமாகச் செய்து வருகிறாள். வாழ்வாதாரமாக வழங்கிய மாட்டினை வளர்த்து பால் விற்பாள். அப்பணத்தை சேமித்து வைப்பகத்தில் வைப்பிலிடுவாள். காணாமல்போனோர் பட்டியலில் உள்ள தனது கணவனை நினைத்து புலம்புவதை நிறுத்தி, ஓய்வெடுக்கும் போதும் உறங்கும் போதும் மனதோடு நினைவலைகளை மீட்டுப்பார்ப்பாள். தனது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக தன்னை அர்ப்பணிக் கும் சிறந்த அன்னையாக சாந்தி வாழ்கிறாள்.

தனக்குக் கிடைத்த மூன்று பிள்ளை களையும் கடவுளால் வழங்கப்பட்ட வரமென எண்ணுவாள் சாந்தி. பொறுப்பான மகன். பெண்பிள்ளைகள் இருவரும் கல்வியில் அக்கறையுடன் படித்து தேர்வுகளில் சிறந்த பெறுபேறு களைப் பெற்று தேறுவதும், அதனைக் குறித்து அயலிலுள்ளவர்கள் ஜானு, அருணி போன்று படியுங்கள் என்று உதாரணம் காட்டிக் கதைக்கும் போதும், அப்பாடா என நிம்மதியடைவாள்.

சாந்தி பாசாலையில் படிக்கும் காலங்களில் சகல துறைகளிலும் திறமையானவளாக திகழ்ந்த மாணவி. உயர்கல்வி கற்கும்போது இவளின் சகோதரனின் சினேகிதன் பாலு சாந்தியை திருமணம் முடிக்கும் விருப்பத்தைத் தெரிவித்தான். இவளின் பெற்றோரும் அன்றைய சூழலில் பிள்ளை களைக் காப்பாற்ற நினைத்தனர்…. இதனால், அவசர திருமணங்கள் நடைபெற்ற காலம் அது. ஆகையால், பாலுவின் நற்பண்புகளும் சேவைகளும் மனதைக் கவர, பெற்றோரின் ஆசியுடன் சாந்தி பாலு திருமணம் நடைபெற்றது. அவர்களின் இல்லறத்தில் மகனின் பிறப்பு, அவர்களை ஆனந்த மழையில் நனையவைத்தது. அடுத்துப் பிறந்த ஜானுவினால் அளவுக்கதிகமான மகிழ்ச்சியடைந்தனர் தம்பதியினர். 'ஆசைக்கு ஒன்று ஆஸ்திக்கு ஒன்று' என சாந்தி பாலுவிடம் கூறி மகிழ்வாள். பிள்ளைகளின் எதிர்காலத்தில் இருவரும் அக்கறையுடன் திட்டமிட்டு வாழ்ந்தனர். பாலு சாந்தியின் நெருக்கமான வாழ்வில் மூன்றாவது மகள் அருணி பிறந்தாள். அவளின் இருண்டாவது அகவையில் பாலு காணாமால் ஆக்கப்பட்டார்…!

நிலைகுலைந்த வாழ்வை நிலை நிறுத்த சாந்தி பல இன்னல்களின் மத்தியில் போராடினாள். மகனின் படிப்பை இடை நிறுத்தி, கடையில் தொழில் புரிய வைத்தாள். தகப்பனின்

நிலை அவனுக்கு ஏற்படா வண்ணம் பாதுகாப்பதற்காக மகனை மத்திய கிழக்கு நாட்டிற்கு அனுப்பி வைத்தாள். அவனின் உழைப்பினை விட அவனின் பாதுகாப்பே அவளின் அன்றைய குறியாக இருந்தது.

மழைவிட்டாலும் தூறல் விடாது என்பார்கள். பருந்து வட்டமிடும்போது கோழி தனது இறக்கைக்குள் குஞ்சினை அடைத்துக் காப்பதுபோல் சாந்தி பிள்ளைகளை பாதுகாத்து வளர்க்கிறாள். அவளின் பயம் நியாயமானதே. அவளின் வாழ்வில் உயிர்ப்பிச்சைக்காக திருமணம் நடந்தேறியமையால், கல்வியைத் தொடர்ந்து தனது இலக்கினை அடைய சாந்தியால் முடியவில்லை. அக்காலப்பகுதியில் பருவத்தின் தேவை கருதாமல், காலத்தின் தேவை கருதி அவளின் திருமணம்நடந்தது.

பிள்ளைகளின் காலமான தற்போதய காலத்தில் திசை திருப்பும் பிழையான பல சமூகக் காரணிகள் வலிமையான சக்தியாக தாண்டவமாடுகிறது. எத்தனை இளைஞர், இளம்பெண்கள் தம் வாழ்வைத் துறந்து இலட்சியப்பாதையில் தம் உயிரை தற்கொடையாக்கினர். தமது வாழ்வை ஈகம் செய்தனர். அன்றைய அரசின் யுத்த வெறியாட்டத்திலிருந்து உயிர்பிழைத்து மீண்டவர் சந்ததி. போதை, பண்பாட்டுச்சீரழிவு, பண்பாடுதழுவாத புதுமையை நாகரிகமென நினைத்து - அநாகரிகமான வாழ்க்கைமுறை, என்ற ஐந்தறிவுக் குணங்களுடன் ஆறறிவு மறந்து செயற்படும் பாதுகாப்பற்ற சமூகச் சூழலில் வாழ்க்கை, ஒவ்வொரு பெற்றோருக்கும் காலம் முழுதும் 'மடியில் நெருப்பு'.

இச்சமூகத்தின் ஒரு அங்கமான சாந்தி, தனது மகளை சந்தேகிப்பது நியாயமானதே. ஜானு, கையிலிருந்த கைபேசியை தாய் பிடுங்கியதுடன், அவர் எழுப்பிய கேள்வியும் தன்னைச் சந்தேகிப்பதாக நினைத்து ஒரு கணம் அதிர்ந்து துள்ளிஎழுந்தாள். இச்சமூகத்தில் வாழும் இளம்கொழுந்து ஜானு. சமூகச் சூழல்கள் அவளையும் ஒருகணம் நிலைகுலைய வைத்தது. நிலைமையை உணர்ந்து சுதாகரித்துக் கொண்ட சாந்தி ஜானுவின் விடைக்காக அவளின் முகத்தினை உற்று நோக்கினாள். எனினும் சாந்தியின் உடல் சிறிதாக கோபத்தில் நடுங்கத்தொடங்கியது.

அக்காவுக்கு அடிவிழும் என எதிர்பார்த்த அருணி பயத்துடன் அம்மாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "நான் கேட்கிறேன் நீ என்ன பேசாமல் இருக்கின்றாய்? வீட்டிலை பொறுப்புடன் வளர்ந்த பிள்ளை நீ. எங்கடை வருமானம் உனக்குத் தெரியாதா? என்ரை பிள்ளை, தன்னை ஒறுத்து வெக்கையிலை நிண்டு வேகி அனுப்புற காசிலை எத்தினை செலவினைத்தான் என்னாலை செய்ய முடியும். 'இன்ரர்நெற்பில்' 4000 ரூபாய் என்டால் மற்றச் செலவுக்கு எங்கை போறது. மாடு வளர்த்து வாற காசோடை பிள்ளை அனுப்புற காசிலையும் மிச்சம் பிடிச்சு உங்கடை சீதனத்துக்கு என்று குருவி சேர்க்கிறமாதிரி சொட்டுச் சொட்டாச் சேர்க்கவே நான் படும்பாடு...! கொஞ்சம் கூட யோசிக்க மாட்டியோ ஜானு"

சாந்தி இப்படிக் கூறினாலும், மனதுள் "கைபேசியில் இக்காலத்துப் பிள்ளைகள் சிலர் செய்வது போல ஏதும் தரவிறக்கம் பண்ணிப்பார்த்தாளோ?

அதாலே ஏதும் பிரச்சினைகள் வருமோ" என வேதனை அடைந்தாள்.நாளாந்தம் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் என்பவற்றில் கைபேசி ஊடான மோசடிகள் பற்றியும் அவள் அறிந்திருந்தாள். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை சிறந்தவர்களாக உருவாக்க எண்ணி, அவர்களை அவ்வுயரத்துக்கு ஏற்றும் ஏணிகளாக தம்மை நினைத்துச் செயற்படுகிறார்கள். பிள்ளைகளோ பெற்றாரின் கடமை இதுவென நினைப்பதால் முதியோர் இல்லங்கள் வலுப் பெறுகின்றன.

சாந்தியின் உருக்கமான பேச்சு ஜானுவின் கோபத்தினைக் குறைத்தது. "அம்மா நான் தமிழ்ப்பாடத்தினை சிறப்புப் பாடமாக எடுத்ததால் தானம்மா இராமாயணம், மகாபாரதம், திருக்குறள், புறநானூறு, அக நானூறு என்டு பல புத்தகங்களையும், தேவையான கட்டுரைகளையும் தரவிறக்கம் செய்து வைத்து படித்தேன். அது தொடர்பாக என்னோட படிக்கிற பிள்ளைகளோடையும் கதைச்சனான். ஒவ்வொருதரும் எப்படியெல்லாம் இதிலை மகிழ்ச்சியாய் ஈடுபடுகினம். எது எதற்கோ எல்லாம் இதைப் பயன்படுத்தினம் "நான் அப்படியில்லையம்மா" என்று அழுதபடியே ஜானு தாயிடமிருந்து கைபேசியை வாங்கி, அதில் தான் பாவிச்ச இணையபாவனையை (internet history) சொடுக்கி "இதைப் பாருங்கோ அம்மா, நான் பார்த்தவை, படிச்சவை எல்லாம் நேர அடுக்கு பிசகாமல் அப்படியே இதிலை இருக்கு' என்று காட்டினாள். அதனைப் பார்த்த சாந்தி அன்புணர்ச்சி மேலீட்டால் மகளைக் கட்டிப்பிடித்து உச்சிமோந்து "ஜானுக்குட்டி அம்மாவை பிழையாய் நினைக்காதையம்மா. இண்டைக்கு எங்கடை குடும்பத்தின் வறுமையும், நீங்கள் வளர்கிற சூழலையும் நினைத்து பயந்திட்டன் ஜானு" என்று அழுகின்ற தன் மகளை தேற்றினாள். "அம்மாவிலை பிழையில்லை. கண்முன்னே கைபேசியூடாக எத்தனை நடக்குது. அவ பயப்படுவதும் நியாயம் தான" என்று ஜானு தன்னைத் தேற்றிய போது, அருணி இருவரின் கால்களையும் சேர்த்து கட்டிப்பிடித்துக்கொண்டு "ஒரே கும்.. கும்.. என விழுமென எதிர்பாரத்தேன் பார்த்தேன். இஞ்சை என்னடாவெண்டால் கட்டிப்பிடித்து அன்பைச்சொரிந்து அன்பாறு ஓடுதே. இதுவும் நந்திக் கடல்லை சேர்ந்து முள்ளிவாய்க்கால் ஊடாக முல்லைக் கடலுக்குப் போகுமோ" என்றாள்.

அருணியின் கதைகேட்டு, சாந்தி சிரித்தபடி இருவரையும் கட்டியணைத்தாளாயினும், "எங்கள் இரத்த ஆறு ஓடிய கடல் அல்லவா அது. அருணி குழந்தை, அதை மறந்திருக்கலாம்..." என்று நினைத்துக்கொண்ட சாந்தி, கடந்த கால கனத்த நினைவுகளுக்குள் மூழ்கடிக்கப்பட்டாள். அவை அவள் இதயத்தை மீண்டும் துளையிட்டன... மீண்டும் வலித்தது... "என்னைப் போலத்தான் மற்றவர்களும் உள்ளே காயங்களை வைத்துக் கொண்டு வெளியே சிரிக்கிறார்களோ...?" என்று எண்ணியவாறே அவ்விடம் விட்டு நகர்ந்து அடுக்களைப்பக்கம் செல்கிறாள் தனிமையைத் தேடி... அவளையும் அறியாமல் அவள் கண்கள் குளமாவதை பிள்ளைகள் அவதானித்துவிட்டால், அவர்களும் கவலை அடைந்து விடுவார்களல்லவா.

# மெல்லக்கற்கும் மாணவர் எதிர்கொள்ளும் தடைகள்

ஒரு ஆய்வு நோக்கு



பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் (பிள்ளைகளைப் போட்டிச்சோதனைகள் மூலம் தெரிவு செய்து உள்வாங்கும் பெரிய கல்லூரிகளைத் தவிர) ஒவ்வொரு வகுப்பிலும் மெல்லக்கற்கும் மாணவர்கள் இன்றும் ஒரு குறிப்பிட்ட தொகையினர் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கான மூலகாரணங்களை பலரது ஆய்வுகளின் அடிப்படையில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்

எமது வடமாகாணத்தைப் பொறுத்த வரை, போர், அதனாலான இடப்பெயர்வு கடந்த காலங்களில் மாணவர்களின் கல்வியில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. இதனால் அந்தக் காலப் பகுதியில் மெல்லக்கற்கும் மாணவர் களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது. அதை யாராலும் தடுக்க முடியாமலும் இருந்தது.

ஆனால், இன்றளவிலும் இந்தப் பிரச்சினை குறைந்தபாடில்லை. புத்தகங்களும், பள்ளிச்சீருடைகளும், மதிய உணவும் அரசாங்கத்தால் வழங்கப் படும் நிலையிலும் கூட, மெல்லக்கற்கும் மாணவர்களின் விழுக்காட்டில் பெரியள வில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. குறிப்பாக ஆரம்பப் பள்ளிக் கூடங்களில், வகுப்பொன்றில் அண்ணள வாக நாலில் ஒரு பங்கினரிலும் அதிக மானோர், இந்நிலையில் உள்ளனர். நவீன உலகில் அவர்களது எதிர்காலம் மிகப்பெரிய ஒரு கேள்விக் குறியாகவே அமைகிறது.

பள்ளிக்கூடம் என்னதான் வளங்களை மாணவர்களுக்கு வழங்கினாலும் ஆசிரிய வளம் என்பது இவ்விடயத்தில் முக்கிய பங்கு வகிப்பதாகவும், பொது வாக பள்ளிக்கூடங்களில் ஆசிரியவளப் பற்றாக்குறை நிலவுவதாகவும் சொல்லப் படுகின்றது. ஆனால், உண்மையில் ஆசிரியவளம் கிடைக்கின்ற வகுப்பிலும் இத்தகைய குறைபாடு காணப்படுகிறது. அப்படியானால், இதற்கான காரணங்கள் பாடசாலையின் வளங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. வேறும் காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

அவ்வாறான காரணிகள் எவை என ஆராய்ந்து தீர்வுக்கு உந்துவதே இவ்வாக்கத்தின் நோக்கமேயன்றி சம்பந்தப்பட்ட எந்தத்தரப்பையும் குறை கூறுவதற்கானதல்ல என்பதை தெரிவிக்க விரும்புகின்றோம்.

உண்மையில் பெரும்பாலான மெல்லக் கற்கும் மாணவர்கள்

முன்பள்ளிகளில் இருந்தே உருவாக்கம் பெறுகிறார்கள். மிகக் குறைந்த பகுதியினரே இடையில் ஏற்படும் தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றனர் என்பதனை நடப்பு நிகழ்ச்சிகள் ஊடாக கண்டுகொள்ள முடியும்.

அப்படியானால், முன்பள்ளிகளில் என்ன நிகழ்கிறது?

இளம் குருத்துகளைக் கையாளும் ஆற்றலும் கல்வித்தகுதியும் எமது எல்லா முன்பள்ளி ஆசிரியர்களிடமும் உள்ளதா?

அதேவேளை, பெரும்பாலான முன்பள்ளிகள் சமூகப்பொருளாதார நிலைமைகளில் பின்தங்கிய பகுதிகளில் காணப்படுகின்றன. அந்த முன்பள்ளிகளின் பௌதிக வளங்கள் புலம்பெயர் மக்களின் உதவியுடன் அல்லது வேறுவகையில் ஓரளவுக்கு தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும் ஆசிரிய வளம் என்பது மக்களுக்கு அதிருப்தி அளிப்பதாகவே உள்ளது. இருந்தாலும் குறைந்த மாதாந்த வருமானத்துடன் அந்த முன்பள்ளிகளை இயக்குவதற்கு இதைத்தவிர வேறு வழிகள் அந்தச் சமூகங்களிடம் காணப்படவில்லை அல்லது அதன் முன்னேற்றத்தில் அக்கறைப்பட நேரமில்லை என்ற நிலைமைகளே இருக்கிறது. கிராமப் புறங்களில் உள்ள ஒருசில குடும்பங்களே நகர்ப்புற சற்று முன்னேற்றமான முன்பள்ளிகளை நாடிச் செல்கின்றன.

இந்த நிலையில் கிராமப்புறத்தின் முன்பள்ளிகளை தரமுயர்த்தும் பொழுது மாணவர்களின் எழுத்தறிவு நிலையில் முன்னேற்றம் காணப்படலாம் என்பது உண்மையே. ஆனாலும் அதுமட்டும் தீர்வாகமுடியுமா என்று எண்ணிப் பார்த்தால், வேறும் காரணிகள் முன்பள்ளி மாணவரின் கல்வியில் தாக்கம் செலுத்துவதைக் கண்டறியலாம். அவையாவன

1. சூழல் காரணிகளால் பாதிப்பு
2. பிறப்புரிமையியல் காரணிகள் (வரலாற்றுக்காரணி) பாதிப்பு

முதலாவது வகை, மாணவர்களைப் பொறுத்தவரை பெற்றோர், சமூகம், கல்வித்துறை சார்ந்த அரசாங்க நிறுவனங்கள் இணைந்து பொறுப்போடு செயலாற்றுவதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டங்களில் குறிப்பிடுமளவிற்கு மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அந்தவகையான செயற்றிட்டங்கள் சிலவும் பள்ளிக்கூடங்கள் ஊடாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன. உதாரணமாக மெல்லக் கற்போருக்கான வகுப்புகளை, சில பள்ளிக்கூடங்கள், பள்ளிக்கூட நேரம் முடிந்தபின்னும், சில பள்ளிக்கூடங்கள் பாடவேளையில் மாணவர்களை வெவ்வேறு குழுக்களாகப் பிரித்தும் செயல்படுத்தி வருகின்றனர்.

ஆனால், இத்திட்டத்துடன் பெற்றோரின் பங்களிப்பும் சமூகத்தின் பங்களிப்பும் பெரியளவில் இணையவில்லை என்பதும் இதனாலேயே பள்ளிக்கூடங்களின் மேற்படி முயற்சிகள் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை என்றும் கருத இடமுண்டு.

1.சூழல் காரணிகளை ஆராயுமிடத்து, முன்பள்ளி மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் அக்காரணிகள்,

அ) குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலைமை

ஆ) பெற்றோரின் கல்விமட்டம்

ஆகியவையாகும்.

குடும்பத்தின் சமூகப்பொருளதார நிலைமை: குடும்பவருமானம் பெற்றோரின் கல்விமட்டம், பிள்ளைகளின் கல்வியில் அவர்கள் காட்டும்

ஈடுபாடு என்பன சமூகப்பொருளாதார நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. சமூகப்பொருளாதார நிலைமைகளில் பின்தங்கிய இடங்களில் பிள்ளைகள் எழுத்தறிவை ஈட்டவேண்டிய பருவத்தில், கற்றுக்கொள்வதற்கான உபகரணங்கள், இட, சூழல் வசதி, ஏற்ற வழிகாட்டல்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதால், எழுத்தறிவு மட்டத்தை எட்டுவதில் தோல்வியைத் தழுவவேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள்.

குடும்ப வருமான நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வளம் என்பது பெரும்பாலும் அப்பிள்ளைகளுக்கு சமூகப்பொருளாதார நிலைமையில் முன்னேற்றமான குடும்பங்களில் வளரும் பிள்ளைகளைப்போன்று, அதிகளவான நேரம், அதிகளவான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பவை முடியாமல் உள்ளது. இதனால், இவர்கள் குறைந்தளவு சொற்களையே தெரிந்து வைத்திருக்கிறார்கள். குறைந்தளவு விடையங்களையே பேசுகிறார்கள், வாசித்து விளங்குவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களது கற்றல் செயற்பாடு மெதுவாகவே நடக்கிறது. ஆகவே, அடுத்தடுத்த வகுப்புக்களிலும் இவர்கள் கல்வியில் பின்தங்கி விடுகின்றனர்.

பெற்றோர்களின் கல்விமட்டம்:

பெற்றோர்களே பிள்ளைகளின் முதல் ஆசிரியர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. பிள்ளைகளின் எழுத்தறிவையும் கல்வியறிவையும் கட்டமைப்பதில் பெற்றோரின் கல்வியறிவு அடித்தளமிடுகிறது. எனவே, பெற்றோரின் நிலை கல்வியில் பின்தங்கியிருப்பின் பிள்ளைகள் தமது பெற்றோரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் கல்விசார் விடயங்களும் பெரும்பாலும் மிகக்குறைவாக இருக்கவாய்ப்புள்ளது. எனவே இக்காரணியும் பிள்ளையின் அடைவுமட்டத்தைப் பாதிக்கிறது.

2.குடும்பத்தின் வரலாறு:

வரலாற்றுக் காரணி என்பது, நம்மால் உரியகாலத்தில் தீர்வு காண முடியாத பரம்பரைக்காரணியாக அமைகிறது. இதற்கு விசேட உதவி தேவைப்படும் மாணவருக்கான கல்வித்திட்டத்தின் ஊடாகவே நாம் அணுகவேண்டியிருக்கும். அதாவது வேறுசில பிள்ளைகளிடத்தில் வாசிப்பு ஆற்றல் குறைவாகக் காணப்படும் அல்லது கிரகிக்கும் ஆற்றல் குறைவாகக் காணப்படும் இத்தகைய நிலைமைக்கு அவர்களின் பரம்பரையில் இருந்து அவர்கள் பெற்ற உடல்கூற்று நிலையைத் தீர்மானிக்கின்ற மரபணு என்ற டி.என்.ஏ இத்தகைய இயல்பைத் தீர்மானிக்கிறது. எனவே இவற்றை நாம் வெளிக்காரணிகளைக்கொண்டு தீர்வுகாணமுடியாது.

விசேட உதவி தேவைப்படும் மாணவர்களாக இத்தகைய மாணவர்கள் கருதப்படுகிறார்கள். இவர்களுக்குக் கற்பிப்பதற்கும் இதற்கான விசேட தகுதிபெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இவ்வகை மாணவர்கள் சமூகத்தில் மிகச் சொற்ப அளவே காணப்படுகின்றனர்.

வரலாற்றுக்காரணி அல்லாத- போர், விபத்து போன்றவையால் உடற்பாதிப்புக்கு உள்ளாவோரும் இத்தகைய நிலைக்குத் தள்ளப்படலாம்.

நாம் மீண்டும் மெல்லக்கற்கும் மாணவர்களை நோக்கும் பொழுது, அவர்களின் வெளிக்காரணிகளில் முன்னேற்றமான நிலைகளைத்தோற்றுவிப்பதன் ஊடாக மாணவர்களின்

அடைவுமட்டத்தை உயர்த்தக் கூடிய தாக இருக்கும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தே. இந்த வகையில் மாணவரின் குடும்பநிலை பற்றிய மேற்சொன்ன நிலைமைகள் தவிர்ந்த பள்ளிக்கூடச் சூழலை அடுத்து நோக்குவோம்.

பள்ளிக்கூடக் கல்வியில் மாணவர் களை ஈடுபடுத்துவதில் தாக்கம் செலுத்தக்கூடிய முக்கியமான அகக் காரணிகளாவன,

1.ஆசிரியரின் கல்வி, தொழிற்றகமை, அர்ப்பணிப்பு மனப்பான்மை

2.கலைத்திட்டத்தின் தன்மை (இது அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புள்ள தாக இருப்பின் மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்)

3. வகுப்பில் பயன்படுத்தப்படும் கல்விமுறைமை

4. கல்வி வசதிகளும் வளங்களும்

மேற்படி நான்கு விடயங்களில் முதலாவது தவிர்ந்த ஏனைய மூன்றும் அரசியல் பொருளாதார நிலைமை களினால் தீர்மானிக்கப்படுகிறது.

அதேநேரம் இவை பள்ளிக்கூடத்துக்கு பள்ளிக்கூடம் மாறுபடுகிறது என்பதை நாம் யாவரும் அறிவோம். ஆனால், முதலாவதில் உள்ள ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மனப்பான்மை என்பது ஒவ்வொரு ஆசிரியரினதும் தனித் தன்மையில் பெரும்பாலும் தங்கியுள்ளது. ஆசிரியர்களது குணாம்சங்களும் மாணவரது கல்வியை ஊக்குவிப் பதிலும் தடைசெய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பல மாணவர்கள் தங்கள் முன்னேற்றத் துக்கு பல ஆசிரியர்கள் காரணமாக உள்ளார்கள் எனவும் அதுபோல சில மாணவர்கள் தாம் கல்வியில் பின் தங்கிப்போனதற்கும் சில ஆசிரியர்கள் காரணமாகின்றார்கள் எனவும் தமது மன வெளிப்பாட்டைத் தெரிவிக்கின்றனர் என்பதை கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்து, கல்வியில் ஈடுபடுத்தி அவர்களின் மேம்பட்ட வாழ்வுக்கு பொறுப்பாக இருக்கவேண்டியவர்களே அவர்களின் மன அழுத்தங்களை அதிகரிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அவர்களைத் தவறாக பயன்படுத்துவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

பல உயர்மட்டப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு உளவளத் துணை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் பல பின்தங்கிய பள்ளிக்கூடங்களுக்கு அந்த் வசதி கிடைக்காமல் உள்ளது. இதனால் அரசியல் சமூகப்பொருளாதர நிலைமைகளில் பின்தங்கிய இடங் களிலுள்ள பள்ளிக்கூட மாணவர்கள் மீண்டுகொள்வது மேலும் கடினமாக்கப் பட்டுள்ளது.

இத்தகைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மெல்லக்கற்கும் மாணவர்களின் உருவாக்கத்தைக் குறைப்பதற்கும் அவர்களை ஏனைய மாணவர் அணியுடன் இணைப்பதற்கும் ஆன பணிகளை அரசும் பள்ளிக்கூடமும் பெற்றோரும் சமூகமும் இணைந்து செயலாற்றக்கூடிய செயற்றிட்டங்களை வகுத்து அதன்பால் ஒன்றிணைந்து செயற்படுவதே வெற்றிக்கு வழிவகுக் கும் என்பதே உண்மை நிலையாகும்.

*- தாரகன்*

எமது இளம் தலைமுறையினருடைய எதிர்காலத்தின் மீது ஈடுபாடுகொண்ட ஆர்வலர்களே, உங்களிடமிருந்து இந்தக் கட்டுரைக்கு விமர்சனங்கள் அல்லது வேறு கருத்தாக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

## விடைகள்

**கடந்த தை-மாசி பொய்யாமொழி இதழில் வெளியான புலமைப்பரிசில் வினாத்தாளிற்கான விடைகள்**

### பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 1 | 21) 3 | 31) 2 |
| 2) 2 | 12) 3 | 22) 1 | 32) 2 |
| 3) 3 | 13) 2 | 23) 2 | 33) 1 |
| 4) 2 | 14) 1 | 24) 3 | 34) 2 |
| 5) 2 | 15) 2 | 25) 1 | 35) 1 |
| 6) 1 | 16) 3 | 26) 1 | 36) 2 |
| 7) 2 | 17) 3 | 27) 3 | 37) 1 |
| 8) 2 | 18) 3 | 28) 3 | 38) 2 |
| 9) 3 | 19) 3 | 29) 3 | 39) 2 |
| 10) 3 | 20) 3 | 30) 3 | 40) 3 |

### பகுதி 2

1. பொருத்தமானவிடை (பந்தியிலிருந்து)
2. மின்னணுச்சாதனம் 3. மனிதன், ஆசிரியர்
4. விசிறி, கீழ்கால் 5. 1) நிறைவு
2) ஆசிரியர்
6. 1) சொல்லி + தருகின்றது
2) மின் + அணு
7. 1) பதற்றம் 2) ஆராய்ச்சி
8. 1) வாசிப்பேன் 2) உண்ணும்
9. 1) மீசைக்கும் ஆசை 2) வெயிலில் தெரியும்
10. 1) அரசி 2) ஓடுகிறான் 3) பெரிய 4) நீ
11. நூலகம் என்பது பூங்காடு
12. 1) நாங்கள் ஒவ்வொரு பந்தியாக வாசிக்க வேண்டும்.
2) பெரியவர் அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லவில்லை
13. 1) குஞ்சு 2) பேத்தை
14. தீர்ப்பு
15. இலங்கை மின்சார சபை
16. பொருத்தமான வாக்கியங்கள்
17. 1) வவ்லா 2) அ (Dh) (ந்) த
18. 1) புகையிரத நிலையம் 2) எத்தனை
19. Be careful
20. 1) நான் உங்களுக்கு உதவலாமா?
2) நான் மனம் வருந்துகிறேன்/ என்னை மன்னிக்கவும்
21. 1) You 2) me 22) 2424
23. மூவாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது
24. iv, vi 25. 7894
(26) 2388 (27) 1) 183.374 2) 527.183
(28) 6 (29) 0.3
30) 28 பிள்ளைகள் 3 மீதி
(31) 5 துண்டுகள்
32. (1) செங்கோணங்கள் 6 (2) 24 cm
33. 5 l 425 ml
34. பொருத்தமான 2 வாக்கியம்
35. 1) ரூபா 75 . 00 2) 50. 00

| 1) | 2) |
|---|---|
| ரூபா 75 . 00 | 50. 00 |
| 54 . 00 | 180 . 00 |
| 75 . 00 | 90 . 00 |
| ரூ. 204 . 00 | ரூ. 320.00 |

36. முள்முருக்கு 37. நெருப்புக்காய்ச்சல்
38. பச்சிலைப்பூச்சி 39. நாய்
40. பூனை 41. (1)
42. ஊசித்துளைக்கமரா
43. பழைய டயரை வெட்டி ஆக்கிய சாடி
44. மத்திய மாகாணம்
45. பிரார்த்தனை 46. (4)
47. அறிவு வெட்டுப்பாடல்
48. தன்னிறைவு, தூய்மை, உலகை நிலைப்பாடு
49. இடுக்கி (சாவணம்)
50. பொய்க்காலில் நடத்தல்
51. நீலம், மஞ்சள்
52. சங்கிலித் தையல்
53. குளோரின் 54. வலைப்பந்து
55. சதுரங்கம் 56. திருகோணமலை
57. தங்குதன் இழை 58. கண்டமாலை
59. எலுமிச்சை 60. வனைசில்லு
61. குழுவாகப் பெறும் தோல்வி அக்குழுத் தலைவனுக்குச் சொந்தமாகும்.
62. செய்திப் பத்திரிகை, சுவரொட்டி
63. நனையாமல் முன்பு போலவே இருக்கும் 64. (2) 65. (2)


# தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை
# மாதிரி வினாத்தாள்-1

◆ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

◆ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


01) 


1. 
2. 
3. 

02) 

1. 
2. 
3. 

◆ ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உருக்கள் உள்ள அடைப்பைத் தெரிவு செய்க.

03) 1)  2)  3) 

04) 1)  2)  3) 

◆ தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.

05)  ..................

1.  2.  3. 

06)  ..................

1.  2.  3. 

◆ 07 ஆம், 08 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

பொய்கையில் அன்னம்

உணவின் பெயர் அன்னம்

குழந்தையின் கன்னம்

தேர்தலில் .............................. 1. சன்னம் 2. சின்னம் 3. பன்னம்

08) வீசும் பந்து
தெருவினில் சந்து
வெற்றிக்கு முந்து
பாடுவாய்................................ 1. சிந்து 2. மந்து 3. குந்து

◆ பின்வரும் பாடலை வாசித்து 09 ஆம், 10 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.


பாம்மைப் கண்டால் நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!
வீம்பாய்க் கத்திக் கெட்டிடுமே!
விரோதி கண்ணில் பட்டிடுமே!


09) பாடலில் விபரிக்கப்படும் பிராணி எது?
1. காகம் 2. எலி 3. தவளை

10) பாடலில் சிறப்பிக்கப்படும் பிராணியின் விரோதி எது?
1. முதலை 2. பாம்பு 3. பூனை

◆ 11 ஆம் 12 ஆம் வினாக்களில் அடைப்பிற்குள் இருக்கும் இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

11)  1. PHT 2. PIT 3. POT

12)  1. 869 2. 809 3. 868

13) 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1. 10 2. 6 3. 7

◆ இங்குள்ள கட்டத்துக்குள் ஏதோ ஒரு ஒழுங்கில் இலக்க்ங்கள் இடப்பட்டுள்ளன. அதன்படி 14 ஆம்,15 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 | 45 | A |
| 1 | 4 | 7 | 25 | 40 | 55 |
| 16 | 13 | 10 | 30 | 35 | 60 |
| 19 | 22 | 25 | 28 | 31 | B |

எழுத்து A உள்ள சதுரத்துக்குப் பொருத்தமான எண் எது?
1. 65 2. 50 3. 60

15. எழுத்து B உள்ள சதுரத்துக்குப் பொருத்தமான எண் எது?

1. 34 2. 35 3. 63

16. வியாபாரி ஒருவன் மாம்பழமொன்றை ரூபாய் 25.00 இற்கு வாங்கி ரூபாய் 30.00 வீதம் விற்றதால் ரூபாய் 100.00 ஐ இலாபமாக அடைந்தான். அவன் விற்ற மாம்பழங்கள் எத்தனை?

1. 04 2. 25 3. 20

17. இரு எண்களின் கூட்டுத்தொகை 85 ஆகும். இவ்வெண்களுக்கிடையிலான வித்தியாசம் 35 ஆகும் எனின் இதில் பெரிய எண் யாது?

1. 60 2. 20 3. 75

18. 6 மனிதர்கள் 3 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 9 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

1. 6 நாட்கள் 2. 2 நாட்கள் 3. 18 நாட்கள்


19. யக்ஷ்வினி காலையில் பாடசாலை நோக்கிச் செல்லும் போது அவளது நிழல் இடது கைப்பக்கம் விழுந்தது எனின் யக்ஷ்வினி பாடசாலை நோக்கிச் செல்லும் திசை எது?

1. கிழக்கு 2. மேற்கு 3. வடக்கு

20. அபிசாயினி தமிழ்ப்பாடப் புத்தகத்தில் 35 ஆம் பக்கத்தில் இருந்து 80 ஆம் பக்கம் வரை வாசித்துமுடித்தாள் எனின் அவள் வாசித்த தாள்களின் எண்ணிக்கை யாது?

1. 23 2. 45 3. 46

◆ 1 இலிருந்து 6 வரையான புள்ளிகள் இடப்பட்டுள்ள சதுரமுகிக் குற்றி ஒன்றின் மூன்று வடிவங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதை அவதானித்து 21 ஆம், 22 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க




21. இங்கு இரு புள்ளிகள் இடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 5 3. 4


22. இங்கு ஐந்து புள்ளியிடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் எத்தனை புள்ளிகள் இருக்கும்?

1. 6 2. 4 3. 1


23. கீழ் உள்ள எழுத்துக்களின் மீது மையைப் பூசி அவ் எழுத்துக்களிற்கு எதிரே அச்சிடுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?



24. இரு பகுதிகளும் சமனான வடிவங்களைக் கொண்ட கூட்டத்தைத் தெரிவு செய்க.



25.



பெரிய கூம்பகம் ஒன்றின் மேற்பகுதியில் இருந்து சிறிய கூம்பகவடிவம் ஒன்றினை வெட்டி நீக்கிய பின் தோன்றும் உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 6 3. 5

26. வரிசை ஒன்றின் சரி நடுவில் நிற்கும் ஏரகன் முன்னாலிலிருந்து 10 ஆவதாக உள்ளான் எனின்அவ் வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 20 2. 19 3. 21

27. 50 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும்தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 11 2. 10 3. 9

◆ கீழே தரப்பட்டுள்ள தகவல்களின்படி 28 ஆம், 29 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க

கலா ஒரு சிறுமி. கலாவின் அக்காவிற்கு மூன்று சகோதரிகளும் மூன்று சகோதரர்களும் உள்ளனர்.

28. கலாவுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

1. 2  2. 3  3. 4

29. கலாவுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?

1. 3  2. 1  3. 2

30. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் உருவைத் தெரிவுசெய்க.

1. 

2. 

3. 

31. சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்ட விடையைத் தெரிவு செய்க.

1. கிராமம் - நகரம் - மாகாணம் - மாவட்டம் - நாடு
2. கிராமம் - நகரம் - மாவட்டம் - மாகாணம் - நாடு
3. கிராமம் - மாவட்டம் - நகரம் - மாகாணம் - நாடு

◆ 32 ஆம், 33 ஆம் வினாக்களில இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


32. விகாரை - விகாராதிபதி ஆயின் பாடசாலை - ....................................

1. ஆசிரியர்  2. அதிபர்  3. மாணவன்


33. தொழிற் பெயரைக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க. - ....................

1. படித்தல்  2. வடிவம்  3. தை மாதம்

34. முதலாம் உருவில் உள்ள சதுரவடிவமான கடதாசியை இரண்டாம் உருவில் உள்ளவாறுஇரண்டாக மடித்து மூன்றாம் உருவில் உள்ளபடி நிறந்தீட்டிய பகுதி வெட்டியெடுக்கப்பட்டது. பின் அதை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் சரியான உரு



உரு 1 உரு 2 உரு 3




1 2 3

35. 20 ஆவது ஒற்றை எண்ணுடன் மிகப் பெரிய ஈரிலக்க இரட்டை எண்ணைக் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?

1. 138 2. 140 3. 137

◆ மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. இதை அவதானித்து 36 ஆம், 37 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




36. இங்கு எந்த நிற மின்குமிழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன?

1. மஞ்சள் 2. நீலம் 3. சிவப்பு


37. மின்குமிழ்களின் எண்ணிக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் இருந்து கூடிய எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடை யாது?

1. மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு
2. சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள்
3. பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள்

38. ஒரு பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் 20 நிமிடத்திற்கு ஒரு மணியும், இடைநிலைப் பிரிவில் 15 நிமிடத்திற்கு ஒரு மணியும் ஒலித்தது. காலை 7.30 மணிக்கு இரண்டு மணியும் ஒன்றாக ஒலித்தது எனின் அடுத்து இரண்டு மணிகளும் ஒன்றாக ஒலிக்கும் நேரம் எது?

1. மு.ப. 8.30 2. மு.ப. 9.10 3. மு.ப 8.15

39. கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள வடிவங்களை அவதானித்து பிழையான விடை உள்ள கூற்றைத் தெரிவு செய்க.



1. வட்டங்களின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் சமன்.
2. சதுரங்களை விட முக்கோணங்கள் கூடுதலாக உள்ளன.
3. வட்டங்களை விட முக்கோணங்கள் குறைவாக உள்ளன.

40. ஒரு சம்பவம் தொடர்பான ஐந்து உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ் உருக்களை சம்பவத்திற்கேற்ப ஒழுங்குப்படுத்தும் போது சரியாக அமையும் விடையைதத் தெரிவு செய்க.



A



B



C



D



E

1. DEBCA 2. DEACB 3. CDEAB

# தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-2

பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்கவும்.

01) பரந்த அவ் வயல் வெளியின் மத்தியில் குளம் ஒன்று அமைந்திருந்தது. அதிகாலை எழுந்துவந்த சூரியனின் பொன் நிறக்கதிர்களால் குளத்தில் நீர் தங்கத்தகடு போல பளபளத்துக்கொண்டிருந்தது.குளக்கரையில் ஆங்காங்கே பெரிய பெரிய மருத மரங்கள் நின்றன. அவற்றில் அமர்ந்திருந்த பட்சிகள் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இவை பார்ப்பதற்கு அழகையும் கேட்பதற்கு இனிமையையும் தரும் இயற்கை தந்த கொடையாகும்.

■ கீழே தரப்படும் 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கான விடையைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

01. பறவைகள் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

.......................................................................................................

02. செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.......................................................................................................

03. இங்கு வந்துள்ள உவமானத்தை எழுதுக.

.......................................................................................................

04. பந்தியில் இடம்பெறும் இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.

.......................................................................................................

05. இங்கு வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக.

.......................................................................................................

06. கீழ்க்காலும் சுழியும் காணப்படும் சொல்லை எழுதுக.

.......................................................................................................

02) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

1) கீரியைக்கண்ட பாம்பு ................................. யினுள் புகுந்தது. (அலை, அளை, அழை)

2) இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது .................... காரியம் ஆகும். (அரிய, அறிய)

3) நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர் வாழ வேண்டுமானால் .................................. உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். (ஊன்,ஊண்)

03) முதலில் தரப்பட்டுள்ள சொல்லுடன் பொருந்தாத சொல்லின் கீழ் கோடிடுக.

1) துன்பம் : இன்னல், அல்லல், உவகை, இடர்

2) அழகு : எழில், வனப்பு, சுந்தரம், அலங்கோலம

04) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம்

..................................................................

2) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

..................................................................

05) கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

1) காற்றுள்ளே போதே ..................................................................

2) சீரைத் தேடின் ..................................................................

06) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

1) அனைவரும் / பிள்ளைகள் / கற்க / கல்வி / வேண்டும்

..................................................................................

2) நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் /கொண்டு / பார்த்துக்

..................................................................................

07) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1) "கேடில் விழுச் செல்வம் கல்வி " என்று பாடியவர் ............................ ஆவார். (பாரதியார், திருவள்ளுவர், ஔவையார்)

2) "மன்னனும் மாசறக் கற்றோனும்......" என்னும் பாடல் இடம் பெறும் நூல் ............................ ஆகும். ( மூதுரை, திருக்குறள், நல்வழி)

3) மகாபாரதத்தில் நன்றி மறவாமைக்கு ..............................எடுத்துக் கூறப்பட்டான். ( கும்பகர்ணன் , ஏகலைவன், கர்ணன்)

08) மிகச்சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக.

1) 1. செய்நன்றி 2. செய்ந்நண்றி 3. செய்ந்நன்றி 4. செய்னன்றி

2) 1. இங்ஙணம் 2. இங்ஙனம் 3. இங்கனம் 4. இங்கணம்

09) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி திருக்குறளைப் பூரணப்படுத்துக.

1) இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

...................................................... செய்து விடல்.

2) காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்

............................................... மாணப் பெரிது.


10) "நான் ஒரு விளையாட்டு வீரனானால் ......" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத்தொடர்புகள் சரியாக இருக்கவேண்டும்.

1) ..................................................................................

2) ..................................................................................

3) ..................................................................................

11) பின்வரும் படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

 ........................  ........................

12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. I am drinking water ..............................................

2. I will come tomorrow ..............................................

13) பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை எழுதுக.

1) நூலகம் :- ........................ 2) அணில் :- ..............................

14) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1) வேகயென் துவன்ன :- ..........................................................

2) செல்லம் கறன்ன யமுத..........................................................

■ தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

15) இலக்கங்களில் எழுதுக.

எண்பதாயிரத்து முந்நூற்று ஐம்பது

..................................................................

16) எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக.

1, 2, 6, 24, ............, .............

17) 1. (xix - vii) இன் பெறுமதியை உரோம எண்ணில் எழுதுக.

..............................................................................

2. தரப்பட்ட எண்ணுக்கு அடுத்து வரும் உரோம எண்ணை எழுதுக.

xvi : ...........................


18) வியாபாரி ஒருவர் முதல் நாள் 650 தேங்காய்களையும், இரண்டாம் நாள் முதல் நாளை விட 25 தேங்காய்கள் கூடுதலாகவும் விற்பனை செய்தார். அவர் இரு நாட்களிலும் விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

19) ஒரு மண்டபத்தில் 2 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும், 4 கதிரைகள் வீதம் உள்ள 5நிரைகளும் உள்ளன. எனின் அம் மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

20) ஒரு குளிர்பானப் போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது எனின் 90 பேரை உபசரிக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது? ........................................................

21) 

இவ்வுருவினுள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

22) விமலா A என்னும் இடத்திலிருந்து 10m தெற்கு நோக்கிச் சென்று பின் அங்கிருந்து தனது வலதுகைப்பக்கம் திரும்பி 10m பயணித்து B என்ற இடத்தை அடைந்தாள். தற்போது அவள் இருப்பதுA எனும் இடத்திற்கு எத்திசையில் ஆகும்? ..........................................................................

23) 


1. இத்திண்ம உருவின் பெயர் யாது?

..........................................................................................

2. இத்திண்ம உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

24) ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களில் 3/4 பங்கு விற்கப்பட்டதன் பின்பு 7 தோடம்பழங்கள் எஞ்சியிருந்தன. எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?..........................................

25) 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

..........................................................................................

26) நீளம் 7m ஐக் கொண்ட கம்பியொன்றில் இருந்து 40cm நீளமான 12 கம்பித் துண்டுகள் வெட்டப்பட்ட பின் எஞ்சியுள்ள கம்பித்துண்டின் நீளம் யாது?

........................ மீற்றர் ....................... சென்ரிமீற்றர்

27) வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.

| பொருள் | அளவு | செலுத்திய பணம் ரூபா | சதம் |
|---|---|---|---|
| பருப்பு | 2kg | 140 | 00 |
| அரிசி | 1kg | 60 | 00 |
| சீனி | 3kg | .......... | .......... |
| மொத்தம் | | 560 | 00 |

28) 1250ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 500mlநீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது? .....................

29) கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பாதை ஒன்றின் தூரம் km இல் காட்டப்பட்டுள்ளது.





1. குருநாகலில் இருந்து தம்புள்ள செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்?..........................
2. தம்புள்ளையிலிருந்து கந்தளாய் செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்? ..............................

30) 1. வரைபிலுள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

2. அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபை பூரணப்படுத்துக.

| பழவகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அப்பிள் | 15 |
| மாம்பழம் | 10 |
| தோடம்பழம் | 25 |
| கொய்யா | 5 |
| அன்னாசி | .................. |




■மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

31) நான் எனது வீட்டுக்கும் எனது பாடசாலைக்கும் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லதொரு பிள்ளையாகத் திகழ்வேன்" எனக் கூறும் படிநிலை யாது?

1) பிரார்த்தனை 2) மன உறுதி 3) உடலைத் தளர்த்தல் 4) மனதைத் தளர்த்தல்

32) ஒரு வித்திலைத் தாவரமாகவும் அதேவேளை உணவாகவும் பயன்படும் வித்து.

1) பலா 2) சோளன் 3) போஞ்சி 4) பப்பாசி

33) வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகளுள் ஒன்று.


1) காற்று 2) சூரியஒளி 3) முதிர்வடையாத வித்து 4) பாளை

34) தேசிய இலட்சனையில் அடங்காதது.

1) நிறைகலசம் 2) மலரிதழ் 3) அரசமிலை 4) நெற்கதிர்

35) இலங்கைக்கே உரிய தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய மலர்.

1) நீல அல்லி 2) அல்லி 3) தாமரை 4) அந்தூரியம

36) 

அருகிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்

1) சிறுகரடி 2) ஓராயன்


3) விருச்சிகம் 4) கலப்பை

37) கொழும்பு நகரைச் சுற்றி ஓடும் நதியின் பெயர்.

1) தியவன்ன ஓயா 2) களுகங்கை 3) களனி கங்கை 4) தெதுறு ஓயா

38) மின்குமிழிலுள்ள வாயு எது?

1) ஆகன் வாயு 2) காபனீரொட்சைட் 3) ஒட்சிசன் 4) நீர்

39) 

இப்படம் தெளிவுபடுத்துவதுடன் சக்தியை விரயமாக்கும் விளையாட்டாக அமைவது.

1) கிளித்தட்டு 2) சடுகுடு

3) கபடி 4) பசுவும் புலியும

40) நவீன போக்குவரத்துச் சாதனங்களால் ஏற்படும் பிரச்சினையாகக் கருதப்படுவது.

1) குறைந்த நேரம் 2) சுற்றாடல் மாசடைதல்

3) விரைவான பயணம் 4) அதிக எண்ணிக்கையானோர் பயணித்தல்

41) தரமான தேயிலையை நீரில் இடும் போது தோன்றும் நிறம்

1) கபிலம் 2) இளம்மஞ்சள் 3) சிவப்பு 4) ஊதா

42) 

இக்காந்தத்தின் பெயர்

1) குதிரை இலாட வடிவக் காந்தம் (பரியிலாடக் காந்தம்)

2) குண்டுமுனைக் காந்தம்

3) சட்டக்காந்தம் 4) U வடிவக்காந்தம்

43) குளிர்காலத்தில் அணியக்கூடியதும் விலங்கு நாரினாலும் ஆன ஆடை

1) கம்பளி 2) பட்டு 3) பருத்தி 4) நைலோன்

44) 'ரிச்சர்ட்" அளவினால் அளக்கப்படும் இயற்கை அனர்த்தம் பின்வருவனவற்றுள் எது?

1) சுனாமி 2) மழை 3) நிலநடுக்கம் 4) சூறாவளி

45) வானில் பூரண சந்திரன் தோன்றி ஒரு வாரத்தின் பின் காணக்கூடிய சந்திரனின் தோற்றம்.


1)  2)  3)  4) 

46) இலங்கை மக்கள் அடிக்கடி சந்திக்கும் இயற்கை அனர்த்தம் எது?

1) சூறாவளி 2) மண்சரிவு 3) இடிமின்னல் தாக்கம் 4) சுனாமி

47) ஆதிகாலத்தில் உணவுப்பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் பிராணிகள் தீண்டாத வண்ணம் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய உபகரணம்.

1) திருகணை 2) உறி 3) பரண் 4) அலுமாரி

48) 


அருகே தரப்பட்டுள்ள மின்காந்தத்தில் கவரும் குண்டூசிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடு

1) கம்பிச்சுருளின் எண்ணிக்கையை ஐதாக்குதல் (குறைத்தல்)
2) மின்கலங்களின் எண்ணிக்கையை குறைத்தல்.
3) மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
4) ஆணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

49) இலங்கை எத்தனையாவது சுதந்திரதினத்தை 2017 இல் கொண்டாடியது?

1) 68 2) 69 3) 67 4) 46

50) பின்வருவனவற்றுள் மின்குமிழ் ஒளிர்வதை சரியாகக் காட்டும் படம்.




51) காடுகளைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம்

1) கறுப்பு 2) பச்சை 3) மஞ்சள் 4) கபிலம்

52) செம்மஞ்சள் வர்ணம் நம்மிடம் இல்லாத போது அவ்வர்ணத்தைப் பெறுவதற்காக நாம் சேர்க்கவேண்டிய வர்ணக் கலவைகள்

1) பச்சை + நீலம் + வெள்ளை 2) பச்சை + நீலம் + வெள்ளை
3) மஞ்சள + நீலம் 4) சிவப்பு + மஞ்சள்

53) 

இப்படக்குறியீட்டினால் உணர்த்தப்படுவது

1) இலங்கை மின்சார சபை
2) மின் விநியோகிக்கும் இடம்
3) இலங்கை கட்டளைகள் பணியகம்
4) பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை

54) பாடசாலையின் கடந்த கால சம்பவங்கள் நிகழ்வுகளை அறிய உதவும் ஆவணம்

1) மகாவம்சம்　　2) சூளவம்சம்

3) சம்பவத் திரட்டுப்புத்தகம்　　4) இராமாயணம்

55) போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 1955　2) 1929　3) 1954　4) 119

56) சர்வதேச புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

1) ஏப்ரல் 22　2) ஏப்ரல் 23　3) மார்ச் 22　4) மார்ச் 08

57) எமது நாட்டுக்குரிய பிராணிகளில் முலையூட்டி, வண்ணத்துப்பூச்சி, மீன், பறவை இனங்கள் குறிப்பவை முறையே

1) மரநாய், கொம்பு ஓணான், சேவல்கொண்டை, நரைப்புழுணி

2) அழகிய சொர்க்கம், நீர்ப்பாம்பு, மரத்தேரை, மரநாய்

3) சுண்டெலி, கொம்பு ஓணான், நாகணவாய், சுண்டெலி

4) கோழிக்கொண்டை, செண்பகம், சுண்டெலி, பச்சைப்பாம்பு

58) **SLDA**

இத் தரநிர்ணய சான்றிதழை அவதானிக்கக் கூடிய பொருள் எது?

1) தீப்பெட்டி　　2) மின்குமிழ்

3) பற்பசை　　4) இலவசபாடநூல்

59) கடதாசிகளால் மடித்துச்செய்யப்படும் ஆக்கத்தின் பெயர்

1) ஓரிகாமி　2) அல்பனா　3) கொலாச்　4) அச்சுப்பதித்தல்

60)



இப்படம் குறித்து இருப்பவர்.

1) மகாத்மா காந்தி

2) ஆபிரகாம் லிங்கன்

3) மார்க்கோணி

4) தோமஸ் அல்வா எடிசன்

# நரியும் சின்ன முயலும்



முன்னொரு காலத்தில் சாம்பல் நிற முயலும் தந்திர மான குள்ள நரியும் இருந்தன.

பருவநிலை மாறியது. விரைவில் வந்துவிட்டது குளிர் காலம், பனிப்புயல் வீசியது. வானத் திலிருந்து சிறுசிறு பனித்துளிகள் மழை போல் கொட்டத் தொடங்கின.குளிரின் கடுமையால் முய லின் சாம்பல் நிறம் முற்றிலும் வெளுத்து பனி வெள்ளை யானது.

"இந்தக் குளிரைத் தாங்க முடிய வில்லை. நான் அவசியம் ஒரு குடிசை கட்டிக்கொள்ளத்தான் வேண்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டது முயல். அது கொஞ்சம் மரப்பட்டைகளைக் சேகரித்து வந்து வேலையைத் தொடங்கியது. வீடு கட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த முயலைப் பார்த்து குள்ளநரி கேட்டது. "அடே முயல்பயலே, நீ என்னதான் செய்துகொண்டிருக்கிறாய்?"

"நீ பர்த்துக்கொண்டுதானே இருக் கிறாய் குள்ளநரி அக்கா? நான் கதகதப் பாக வசிக்க ஒரு குடிசை கட்டிக் கொண்டி ருக்கிறேன்"

"ஆமாம் ஆமாம் நல்ல யோசனை தான்." என்ற குள்ளநரி பிறகு தனக்குள் இரகசியமாகச் சொல்லிக்கொண்டது: "நாமும்ஏன்ஒருவீட்டைக்கட்டிக்கொள்ளக் கூடாது. ஆனால் நான் கட்டிக்கொள்ளும் வீடு ஒரு பளிங்கு மாளிகையாக இருக் கும். ஆமாம் நான் அற்புதமான ஒரு பளிங்கு அரண்மனை போன்று என் வீட்டைக் கட்டுவேன். முட்டாள்கள் தான் மரப்பட்டையால் வீட்டைக் கட்டுவார்கள். ஹா...ஹா...ஹா..."

பிறகு அந்தக் குள்ளநரி பெரிய பெரிய பனிக்கட்டிகளைத் தூக்கிவரத் தொடங் கியது. ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பனிக்கட்டிகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கியது.

இரண்டு வீடுகளும் ஒரே நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டன.முயலும் நரியும் அதனதன் வீட்டுக்குள் குடிபுகுந்தன. குள்ளநரி தன் பனிக்கட்டி வீட்டின் யன்னலில் அமர்ந்தபடி முயலை உற்றுப் பார்த்தது. "இந்த முயற்பயலைப் போல ஒரு மட சாம்பிராணி எங்காவது இருப் பானா?" என்று நினைத்து கேலிச்சிரிப்பு சிரித்தது. "இவன் நாகரிகம் தெரியாத

நாட்டுப்புறத்தான்! போயும் போயும் அந்த மரப்பட்டைகளை வைத்து வீடு கட்டி யிருக்கிறானே என்ன ஒரு கோமாளித் தனம்! என்னுடைய வீடு தூய்மையாகவும் பளபளப்பாகவும்இருக்கிறது. இது உண்மை யிலேயே ஒரு பளிங்கு அரண்மனை தான். இராஜாக்களிடம் தான் இது போன்ற ஒரு வீடு இருக்கும்"

குளிர்காலம் இருக்கும் வரை நரிக்கு ஏதும் சிக்கலில்லை. இளவேனிற் காலம் வந்ததும் தான் தொடங்கியது பிரச்சினை. அப்போது கதிரவன் வெப்பமாகப் பிர காசிக்கத் தொடங்கினான். குள்ள நரியின் அரண்மனை உருகித் தண்ணீராக ஓடியது.வீடு இல்லாமல் இனிமேல் என்ன செய்யும் அந்தக் குள்ளநரி? ஒரு நாள் முயல் புல் மேய்வதற்காக வெளியே சென்றது. அந்த நேரம் பார்த்து நரி, முயலின் வீட்டிற்குள் நுளைந்தது.

முயல் அங்கங்கே புல் மேய்ந்து கொண்டே வீட்டுக்குத் திரும்பியது.அது தன் வீட்டுக்கதவைத் தள்ளியது. ஆனால், திறக்க முடியவில்லை. அது திரும்பத் திரும்ப கதவைத் தட்டத் தொடங்கியது.

"யார் அது?" குள்ளநரி கோபத்துடன் மிரட்டியது.

"நரியக்கா, நான் தான் சாம்பல் நிற முயல் வந்திருக்கிறேன். கதவைத் திறவுங்கள்"

"சாம்பல் நிற முயலாவது சோம்பல் முயலாவது ... யாராக இருந்தாலும் வெளியிலேயே கிட!" என்று குள்ளநரி சிடுசிடுப்புடன் சொன்னது.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்த முயல், மறுபடியும் சொன்னது: "நரியக்கா உங்கள் கிண்டல் பேச்சை கொஞ்சம் நிறுத்துங்கள் என்னை உள்ளே விடுங்கள் நான் தூங்கவேண்டும்"

ஆனால், தந்திரமான குள்ளநரி உறுமியது" நான் உன்னை உதைத்து நொருக்குவேன், அடித்து விளாசுவேன். முயலே, அதன் பிறகு உன்னை பழந் துணிபோல் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்துவிடுவேன்" என்றது.

முயல் அழுதுகொண்டே துயரத்து டன் அலைந்து திரிந்தது.வழியில் அது ஒரு ஓநாயைப் பார்த்தது. "எதற்காக அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது ஓநாய்.

முயல் அழுதுகொண்டே சொன்னது: "என் நிலை உனக்கு வந்தால் நீயும் கூட இப்படித்தான் அழுவாய். எனக்கு மரப்பட்டைகளால் ஆன ஒரு வீடு இருந்தது. குள்ள நரிக்கு பனிக்கட்டியால் ஆன ஒரு வீடு இருந்தது.அந்த நரியின் வீடு சூரிய வெப்பத்தால் உருகிக் கரைந்து காணமல் போய்விட்டது. உடனே நரி திருட்டுத் தனமாக என் வீட்டிற்குள் நுழைந்து கொண்டது.அது இப்போது என் சொந்த வீட்டிற்குள்ளேயே என்னை உள்ளே விட மாட்டேன் என்று மிரட்டுகிறது."

"நீ கொஞ்சம் பொறுமையாக" இரு ஓநாய் சொன்னது. "நாம் இருவருமாக சேர்ந்து அதை வெளியே துரத்திவிடு வோம்."

"ஐயோ உன்னால் முடியாது ஓநாய் அண்ணா, முடியவே முடியாது. அந்த நரி உட்புறமாகத் தாளிட்டுக் கொண் டுள்ளது.

அட! நான் என்ன செய்கிறேன் என்று நீ பார்க்கத்தானே போகிறாய். அதை நான் துரத்தியடிக்காவிட்டால் என் பெயர் ஓநாய் அல்ல! என்பெயரைச் சுண்டெலி என்று மாற்றி வைத்துக் கொள்கிறேன்."

முயல் மிகவும் மகிழ்ச்சி யடைந்தது. நரியை விரட்டி அடிப்பதற்காக அவை இரண்டும் புறப்பட்டன. சற்று நேரத்தில் வீட்டையடைந்தன.

"ஏய், திமிர் பிடித்த நரியே, மரியாதை யாக வெளியே வந்துவிடு" ஓநாய் சத்த மாகச் சொன்னது. ஆனால் தந்திரமான

நரி, பதிலுக்கு மிரட்டியது: "ஓநாயே நான் வெளியே வந்தேனென்றால் உன்னை அடித்துத் துவைத்துவிடுவேன். அப்புறம் உன்னைக் கந்தல் கந்தலாகக் கிழித்து எறிந்துவிடுவேன்!"

"ஐயையோ! நரி மிகவும் கோபமாக இருக்கிறது போலுள்ளது. என்று மெது வாகச் சொன்ன ஓநாய், வாலைப் பின்னாங் கால்களுக்குள் ஒடுக்கிக் கொண்டது. பிறகு பயத்தில் அலறியபடியே ஓரே பாய்சலாக ஓடிச்சென்றது.

பிறகு எருது ஒன்று முயலைப் பார்த்த போது கேட்டது: "நீ ஏன் அழுது கொண்டி ருக்கிறாய் சின்ன முயலே?" முயல் எருதிடம் எல்லா விபரங்களையும் சொன்னது. முயலின் கதையைக் கேட்டபிறகு எருது சொன்னது: "கவலைப் படாதே முயலே நாம் இருவருமாகச் சேர்ந்து அந்த நரியை அங்கிருந்து விரட்டிவிடுவோம்" முயல் "உன்னால் முடியாது" என்று தடுத்தும் கேளாமல் எருது, நரி இருக்கும் வீட்டிற்கு வந்தது.

"ஏய்.. நரியே வெளியே வா!" எருது அதிகாரமாக அழைத்தது. ஆனால், நரியின் மிரட்டலில் அதுவும் பயந்து ஓடி ஒளிந்தது. பிறகு முயலுக்கு உதவுவதாகச் சொன்ன கரடியும் நரியின் வசவைக் கேட்டு பாய்ந்து ஓடிச்சென்றது. என்ன செய்வதென்று தெரியாமல், முயல் ஒரு மண் மேட்டின் மீது அமர்ந்து அழத் தொடங்கியது. அப்பொழுது வாள் ஏந்திய படி வந்தது, ஒரு சிவப்புக் கொண்டைச் சேவல். அது முயலிடம் கேட்டது:

"முயலே நீ எதற்காக அழுது கொண்டிருக்கிறாய்?"

தன் கதையை மறுபடியும் சொல்லி அழுதது முயல்.

சேவல் சொன்னது: "கொஞ்சம் பொறு. நாம் இருவருமாகச் சேர்ந்து அந்த நரியை உன் வீட்டிலிருந்து விரட்டியடித்துவிடுவோம்."

"ஓ சிவப்புக் கொண்டைச் சேவலே, உன்னால் அது முடியாது. முதலில் ஓநாய் வந்தது. நரிக்குப் பயந்து அது ஓடிவிட்டது. பிறகு எருது வந்தது. அதுவும் அஞ்சி நடுங்கி ஓடிவிட்டது.கரடியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப் பொழுது நீ எனக்கு உதவுகிறேன் என் கிறாய். நீயும் தோற்றுத்தான் போவாய்."

"சந்தேகப்படாதே முயலே, நாம் முயற்சி செய்து பார்க்கலாம்" என்றது சேவல். அவை இரண்டும் நரியை விரட்டி அடிக்கப் புறப்பட்டன. முயலின் வீட்டை அடைந்ததும் சேவல் எழுச்சி யான குரலில் பாடலொன்றைப் பாடியது.

"செந்நிறக்கொண்டையன் தலை
உயர்த்தி வருகிறான்!
பந்தாடப்போகிறான் பண்பற்ற
நரியை!
வீட்டைத் திறந்து முயலையும்
குடியேற்றப் போகிறான்!
நரித்தோலை உரித்துத் தோரண
மும் கட்டுவான்!"

குள்ளநரி பயந்து நடுங்கியது. அது கெஞ்சும் குரலில் சொன்னது: "திரு செந் நிறக் கொண்டையன் அவர்களே, ஒரு நிமிடம் பொறுத்துக்கொள்ளுங்கள் ஐயா! நான் என் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுகிறேன்"

ஆனால், சேவல் தொடர்ந்து
வீரத்துடன் பாடியது:
"சேவல் வருகிறான் வாள்கொண்டு!
இரு துண்டாய் ஆகுமே உன்
தலையும்!"

குள்ளநரி மெதுவாகக் கதவைத் திறந்து, பிறகு விருட்டென்ற தாவி ஓட்டமும் பாய்சலுமாக வெளியே சென்று மறைத்தது. அதன் பிறகு சேவலும் முயலும் அந்த வீட்டில் என்றும் இணைபிரியாத நண்பர்களாக வசித்தன.

*-நன்றி இணையம்*

# சொற்புதிர்

கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | ந் | தை | ஐ | ந் | து |
| று | நா | ன் | கு | கி | ளி |
| ப | எ | ட் | டு | சே | ஓ |
| ரு | கொ | வா | ஏ | வ | ன் |
| ந் | க் | த் | ழு | ல் | று |
| து | கு | து | கா | க | ம் |

உதாரணம்: பறவைகள் எண்கள்

ஆந்தை ஆறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பு | பு | ஐ | ப் | ப | சி |
| த | ர | வெ | ள் | ளி | ஆ |
| ன் | ட் | மா | சி | ச | னி |
| ஞா | டா | செ | வ் | வா | ய் |
| யி | தி | ங் | க | ள் | தை |
| று | கா | ர் | த் | தி | கை |

உதாரணம்:

மாதங்கள் கிழமைகள்

ஆனி சனி

# word search

words from
environment of classroom


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | P | V | U | R | E | V | K | M | P | Q | Y | P | K | J |
| I | O | C | B | S | E | R | O | E | N | C | H | L | C | I |
| G | T | O | E | M | A | A | N | K | A | W | P | A | A | P |
| T | P | G | R | M | A | C | D | L | Y | L | A | Y | P | P |
| G | A | J | K | S | I | T | E | I | O | X | R | G | K | T |
| B | L | O | X | L | S | N | H | O | N | M | G | R | C | E |
| M | O | T | C | N | D | A | H | E | Z | G | O | O | A | A |
| B | D | A | F | A | O | C | L | Q | M | A | E | U | B | C |
| W | S | N | R | N | S | T | L | C | Z | A | G | N | O | H |
| E | P | I | H | S | D | N | E | I | R | F | T | D | P | E |
| T | E | X | T | B | O | O | K | B | Z | E | J | I | R | R |
| Q | K | R | O | W | E | M | O | H | O | W | S | S | C | S |
| L | E | A | R | N | I | N | G | Y | H | O | X | A | U | S |
| G | N | I | T | I | R | W | D | E | S | K | K | Z | R | J |
| C | G | D | W | A | H | P | W | E | A | F | S | V | U | E |

BACKPACK
CLASSROOM
FRIENDSHIP
LAPTOP
NOTEBOOK
READING
TEXT

BOOKMARK
DESK
GEOGRAPHY
LEARNING
PENCILCASE
SCHOOL
BOOK

CALENDAR
ERASER
HOMEWORK
MATHEMATICS
PLAYGROUND
TEACHERS
WRITING

# UNHELPFUL FRIENDS



Thank for internet

Bunny rabbit lived in the forest. He had many friends. He was proud of his friends.

One day Bunny rabbit heard the loud barking of wild dogs. He was very scared. He decided to ask for help. He quickly went to his friend deer. He said, "Dear friend, some wild dogs are chasing me. Can you chase them away with your sharp antlers?"

The deer said, "That is right, I can. But now I am busy. Why don't you ask bear for help?"

Bunny rabbit ran to the bear. "My dear friend, you are very strong. Please help me. Some wild dogs are after me. Please chase them away," he requested to the bear.

The bear replied, "I am sorry. I am hungry and tired. I need to find some food. Please ask the monkey for help."

Poor Bunny went to the monkey, the elephant, the goat and all his other friends. Bunny felt sad that nobody was ready to help him.

He understood that he had to think of a way out by himself. He hid under a bush. He lay very still. The wild dogs did not find the bunny. They went chasing other animals.

Bunny rabbit learnt that he had to learn to survive by himself, not depending on his unhelpful friends.

Moral: It is better to rely on your self than depend on others.

# புதிய விடுகதைகள்

கல்லிலும் முள்ளிலும் நடப்பான்
காரியங்கள் இலகுவாக்குவான்
கடமைபுரியக் காத்திருப்பான் வாசலில் அவன் யார்?

தலையில் ஏறி அமரும்
தருணத்தில் தக்க காப்பு வழங்கும்
'கிளிப்' அல்ல 'றிபன்' அல்ல
பேருந்தில் நீ சென்றால் கூட வாராது அது எது?

கால் இருக்கு நடக்கமாட்டான்
தலையில்லை வாலில்லை- என்று
கவலையும் படமாட்டான்
களைத்து நீ வந்துவிட்டால்
காத்திருந்து தாங்குவான் அவன் யாா?

வாசலில் இருக்கமாட்டாள்
வழித்துணைக்கு வரமாட்டாள்
வீட்டுக்குள் முடங்கிடுவாள்
தன் அழகு கெடும்வரை
உன் மனை அழகு செய்திடுவாள் அவள் யார்?

உனக்கும் உன் மூதாதைக்கும்
அறிவூட்டி அமுதூட்டினேன்-அதனாலே
நான் பனைமரத்துக்கு நன்றிக்கடன் பட்டவள்
எப்போ என்னைத் தொலைத்தீரோ
அப்போதிருந்து, நீர் அந்நியருக்குக் கடன்பட்டவர்
நான் யார்?

காலையிலும் மாலையிலும்
என் அழகில் மயங்காதவர் இல்லை
எல்லோர்க்கும் என்னைத் தொட்டுவிட ஆசை
இருந்தாலும் நானோ தொடுதூரத்தில் இல்லை
'ஆழி' இற்கும் எனக்கும் தமிழில் முதல் எழுத்து ஒன்றே நான் யார்?

**கடந்த இதழின்
குறுக்கெழுத்துப்
புதிருக்கான விடை**

இடமிருந்து வலம்

1.பகுத்தறிவு
4.மதம்
5. மாட்சிமை
8.வ.சி.உ. சிதம்பரனார்
9.மதிப்பு
11. தப்பு
12.காக்கை குருவி

மேலிருந்து கீழ்

1. பனாமா
2.தலைமை
3.அம்பயர்
4.மந்திரவாதி
6.சிடுசிடுப்பு
7.செம்பு
8.வசந்தம்
9.மங்கை
10.புரவி

விடைகள் அனுப்பவேண்டிய கைபேசி தொடர்பு எண்: 0771461509
Viber (வைபெர்), WhatsApp (வாட்ஸ் அப்) இலும் தொடர்பு கொள்ளலாம்

# சங்ககால தமிழர்தம் வாழ்வியல்

இலங்கை உயர்தரவகுப்பு கலைப்பிரிவு மாணவர்கள்
குறிப்பெடுத்துக்கொள்ள உதவும் வகையில் அமைந்தது.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு"

இது நாமக்கல் கவி இராமலிங்கர் அவர்களின் பட்டறிவு மொழி.

ஆம், தமிழர் மொழியாலும், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றாலும் தனித் தன்மை உடையவர்கள். உலக மாந்த வரலாற்றில் தமிழர் தனித்தன்மையும் சிறப்பிக்கப்படுகிறது.

இவ்வாறு பெருமைக்குரிய தமிழர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், அகழ்வுச்சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் வாயிலாக அறிய முடிகின்றது .

**பழமையான நாகரிகங்கள்**

பழமையான உலக நாகரிகங்கள் ஐந்து.அவையாவன: ரோமானியம், கிரேக்கம், சீனம், மொசப்பதோமியம், மொகஞ்சசதாரோ -கரப்பா என்னும் இந்திய நாகரிகம் ஆகியனவாகும் .

**மொகஞ்ச்சதாரோ
–கரப்பா நாகரிகம்**


மொகஞ்ச்சதாரோ-கரப்பா நாகரித்தை ஆய்வு செய்தபல வரலாற்று ஆய்வாளர்கள் தமிழர்தம் நாகரிகக் கூறுகளே அதிகம் காணப்படுகின்றன.அவர்தம் தெய்வ வழிபாடு, பயன்படுத்திய பொருட்கள் தமிழருடன் இன்றுவரை தொடர்புடையனவாக இருப்பதையே இதற்கு முக்கியமான விளக்கமாகக் கூறுகின்றனர்.



தலைச்சங்கப் புலவர் அகத்தியரின்
12 ஆம் நூற்றாண்டுக்குரிய சிலை

**சங்க நூல்கள்**

சங்கம் என்ற சொல், வடமொழியில் இருந்து தமிழ் மொழியில் வந்து கலந்து விட்ட சொல்லாகும். சமணர், மற்றும் பௌத்தர் தமிழ் நாட்டிற்கு வந்த கால கட்டத்தில் இச்சொல் தமிழ் மொழியில் கலந்தது எனலாம். பல சான்றோர் கூடுமிடத்தை 'சங்கம்' என்று அழைத்தனர். சமணர் மற்றும் புத்தர்கள் கி.பி இரண்டு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலமாகும். அக்காலகட்டத்தில் சான்றோர் பலர் முயன்று எட்டுத்தொகை. பத்துப்பாட்டு முதலான நூல்களைத் தொகுத்தனர். அந்த நூல்களின் தொகுப்பினை சங்க




ஏறத்தாழ 30,000 (முப்பதாயிரம்) ஆண்டுகளுக்கு முதல் கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தின் வரைபடம்- இது விஞ்ஞான, புவியியல், வரலாற்று ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இதுவே பழந்தமிழ்நாடு.

நூல்கள் என்றும், சங்ககால நூல்கள் என்றும் வழங்கினர்.

### சங்ககாலம்

தமிழர்தம் இலக்கியங்கள் மூன்று சங்க காலங்களில் தோன்றியதாகவும், மூன்று சங்க காலங்களில் எண்ணற்ற புலவர்கள் இருந்தனர் என்றும் கூறப்படுகின்றன. முதல் இரண்டு சங்க கால நூல்கள் கடல் கோள்களால் அழிவுற்றன. எஞ்சியவை கடைச்சங்க காலத்தில் கிடைக்கப்பெற்ற நூல்களே ஆகும் என்கின்றனர். முதல் இரண்டு சங்கங்கள் லெமூரியாக் கண்டம் (குமரிக்கண்டம்) என வழங்கப்பெற்ற பெரிய தமிழ் நிலப் பரப்பாகும். அப்பகுதி, இப்போதுள்ள இந்திய உபகண்டத்தின் கன்னியா குமரிக்கும் தெற்கே அமைந்திருந்தது. கடல்கோள்களால் அந்தப்பகுதி அழிவுற்றது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்பகுதிக்குத் தலைநகரங்களாய் விளங்கியனவே *கபாடபுரம்* மற்றும் *வடமதுரை* என்பன. அந்த இரு நகரங்களில் முறையே முதல்,இடை தமிழ் சங்கங்கள் இருந்தன என்று ஆன்றோர் ஆய்ந்து அறிந்துக் கூறியுள்ளனர் .

### மதுரையும் சங்கநூல்களும்

இப்போது உள்ள மதுரை மாநகர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீரும் சிறப்பும் பெற்று பாண்டியர்களின் தலைநகரமாய் விளங்கிற்று. அங்கே தான் தமிழ்ச்சங்கம் இருந்தது. பாண்டியர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் என்று கூறப்படுகிறது.

நூல்கள் பல கிடைக்கப்பெறவில்லையாயினும் எட்டுத்தொகை பத்துப்பாட்டோடு சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு இலக்கியங்களும் அக்காலத்திய பண்பாட்டு இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலம் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. இதற்கு காரணம் அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, அரசியல், தமிழ்மொழி ஆட்சி, இலக்கியவளம், புலமைப்போற்றல், பண்பாடு நாகரிகம் என சொல்லிக் கொண்டே போகலாம்.

### அரசியல்

இனக்குழு குமுகாயம் ஒழிந்து நிலவுடைமைக் குமுகாயமும், முடியாட்சி குமுகாயமும் தோன்றிய காலம் சங்க காலம் எனப்படுகிறது. ஊர்ப்புறங்கள் இனக்குழு நாகரிகத்தையும், நகரங்கள் நிலவுடைமை நாகரிகத்தையும் கைக்கொண்டிருந்தன. ஊர்ப்புறத் தலைவர்கள் குடவோலை முறையிலும், அரசர்கள் வாரிசு அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். போரும், பூசலும் மக்களை பெரிதாகப் பாதிக்கவில்லை. மக்கள் போர்க்காலத்தும் அமைதியான வாழ்க்கையே வாழ்ந்தனர் என்பதும் போர் என்பது மன்னர்க்கும் மறவர்க்கும் உரியது என்பதும் அக்கால இயல்பாய் இருந்தது. ஒரு நாட்டு புலவரும் வணிகரும் வேறு நாடு செல்வதற்கு எத்தடையும் விதிக்கப்படவில்லை. பொதுமக்களிடையே கிளர்ச்சி போன்றன நடைபெறவில்லை. மன்னன் மக்கள் மனமறிந்து செயல்பட்டான். மக்கள் கருத்துகளை அவர்கள் சார்பாகப் புலவர்கள் மன்னனிடம் எடுத்துக் கூறினர். நல்லாட்சி நடந்தது. தமிழ் வேந்தர்கள் வெற்றிகள் பல பெற்றனர்.

### தமிழ்மொழி ஆட்சி

தமிழ் நாட்டைத் தமிழர்களே ஆண்ட காலம் சங்ககாலம். அக்கால அரசில் தமிழொன்றே ஆட்சி மொழியாய் இருந்தது. பின் ஆண்ட களப்பிரர்களோ, பல்லவர்களோ தமிழைப் புறக்கணித்தனர். அவர்கள் காலத்தில் சமஸ்கிருதமும், பாலியும், பிராகிருதமும் ஆட்சி செய்தன. பிற்கால பல்லவர் காலத்தில் தமிழ் தலையெடுத்து ஆட்சிமொழி ஆயிற்று என்றாலும் சமஸ்கிருத ஆதிக்கம் ஓய்ந்து விடவில்லை. பிற்கால சோழர் காலத்திலும் இதே நிலை. ஊர்ப் புறத்தலைவர்கள் குடவோலை முறைக்குத் தகுதியாக வேண்டுமெனில் வேத கல்வி பயின்றாக வேண்டும். பின் வந்தவர்களும் தங்கள் தாய் மொழியையே ஆட்சி மொழியாக கொண்டனர். இத்தகைய வரலாற்றில் ஆராயும் போது தமிழ் ஆட்சி செய்தகாலம், தமிழனால் தமிழன் ஆளப்பட்ட காலமாகிய சங்ககாலம் பொற்காலமே.

### இலக்கியவளம்

ஆட்சி அரசியல்தான் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு அடித்தளம்.. பாட்டும் தொகையுமாகிய சங்ககால இலக்கிய விழுமத்திற்கு அக்கால அரசியலும் நல்லாட்சியுமே காரணமாக இருக்க முடியும். சிறந்த இலக்கியங்கள் தோன்றும் காலம், ஒரு நாட்டிற்கு நற்காலம் என்பது உண்மை. ஈடும் இணையுமற்ற தூய தனித்தமிழ் இலக்கியங்கள் தோன்றிய காலம் சங்ககாலமாகும்.

### புலமை போற்றல்

"அறிவுடை யோனாறு அரசும் செல்லும்" என்று அறிவாளிகளின்

மேன்மையை அரசனே அறிவிக்கிறான். இனம் குலம் ஆகிய வேற்றுமைக்கு அப்பாற்பட்டதாகக் கல்வி போற்றப் பட்டது.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

எனச் செல்வத்திலும் கல்வியே பெருமை சேர்ப்பது என அக்காலத்தார் கருதினர். அறிவுக்கும் கல்விக்கும் முதன்மை கொடுக்கும் குமுகாயம் செல்வத்திலும் முதன்மை பெறுதலை இன்றும் காணலாம்.

"அறிவுடையார் எல்லாம்
உடையார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்."

என்ற வள்ளுவர் சொல் பொய்யன்று. அறிவார்ந்த குமுகாயம் அறிஞர்களை போற்றியது.

### புலவரின் செயற்பாடு

பொருளையும் பொன்னையும் பரிசாகப் பெறும் இரவலர்கள் தானே புலவர்கள் என எள்ளி நகையாடுவோர் உளர். புலமைக்குப் பரிசு ஒரு மதிப்பீடு என்றே அக்காலப்புலவர்கள் எண்ணினர். பரிசுக்காக பொய் கூறி ஒருவனை வாழ்த்தியதில்லை அவர்கள். வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டவராயினும், எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே என மன்னனை எதிர்ப்பதில் இறுமாப்பு உற்றனர். அவர்தம் அறிவு, ஆட்சிக்கும் மக்களுக்கும் மன்னனுக்கும் பயன்பட்டது. அறிவுடையோர் வழிகாட்ட அரசன் ஆட்சி புரிந்ததால் ஆட்சி சிறப்புற்றது.

### பெண்மை போற்றல்

பெண்களில் பெருந்தொகையினர் படித்தவராயிருந்தனர், பெருமைமிகு புலவர்களாக முப்பதுக்கும் மேற்பட்ட



சுட்டமண்ணில் செய்யப்பட்ட பெண் தெய்வங்களின் சிலைகள்-சங்ககாலம்

பெண்கள் விளங்கினர். ஔவையார், வெள்ளி வீதியார், நக்கண்ணையார், ஆதிமந்தியார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. கல்வியுரிமை மட்டுமன்றிச் சமுதாயத்தின் பிற உரிமைகளும் பெற்றிருந்தனர். பெண்கள் விரும்பியவனைக் கணவராகப் பெறும் உரிமை, கணவன் தேடிவந்த பொருளைப் பாதுகாக்கவும் செலவிட வும் உரிமை, அரசு பணிகளில் பணியாற்றும் உரிமை எனப் பெண்கள் பெற்ற உரிமைகள் பல.

### தமிழர் வாழ்வியல்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் உயர்வான வாழ்க்கை வாழ்ந்தனர். உயரிய சிந்தனை, வாழ்வியல் கோட்பாடு, நாகரிக வளர்ச்சி ஆகியவற்றில் மாந்த குமுகாயத்திற்கே முன்னோடியாக விளங்கியுள்ளனர்

### வாழ்க்கைப் பாகுபாடு

தமிழர் அகம், புறம் என வாழ்க்கை முறையை வகுத்துக்கொண்டனர். அகவாழ்வென்பது இல்லறவாழ்வு, புறவாழ்வு என்பது அரசியல் வாழ்வு என வாழ்வியலை வகுத்துக்கொண்டு வாழ்ந்தனர்.

## இல்லற வாழ்வு

இல்லற வாழ்வு திருமணத்திற்கு முன் களவு என்றும், திருமணத்திற்குப் பின் கற்பு வாழ்க்கை என்றும் வகுக்கப் பெற்றிருந்தது.

நிலப்பகுதி ஐந்தாகப் பகுக்கப் பெற்றிருந்தது .

அவை ,குறிஞ்சி ,முல்லை , மருதம், நெய்தல், பாலை என்பனவாம். அந் நிலத்தின் தன்மைகளுக்கு ஏற்ப திணை அல்லது ஒழுகலாறு வகுக்கப் பெற்றிருந்தது. இலக்கிய வழி முதல்,கரு, உரிப்பொருள் என்ற முப்பாகுபாடுகள் வழி, மக்கள் வாழ்க்கை முறை இயம்பப் பெற்றுள்ளது.

## நிலமும் வாழ்வும்

குறிஞ்சிக்கு முதற்பொருள் மலையும் மலையைச்சார்ந்த இடமும்,

முல்லைக்கு காடும் காடு சார்ந்த இடமும்,

மருதத்திற்கு வயலும் வயல்சார்ந்த இடமும்,

நெய்தலுக்கு கடலும் கடல்சார் இடமும்,

பாலைக்கு என்றோர் தனிப்பட்ட நிலம் இல்லையே ஆயினும்,

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும் 'என்று தொல்காப்பியர் இலக்கணம் கூறி அந் நிலம் மணற் பாங்கானது என்று விளக்கியுள்ளார் .

கருப்பொருள் என்றால், நிலமும் பொழுதும் நிலைக்கலனாகக்கொண்டு இயங்கும் இயற்கைப் பொருள்களையும், செயற்கைப் பொருள் களையும் குறிப்பனவாகும்

தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் போன்ற பிறவும் கருப்பொருளாகும். உரிப் பொருள் என்றால் திணைக்கு உரிமை பூண்டு வருவனவாம்.

அவை, குறிஞ்சிக்கு -புணர்தல், புணர்தல் நிமித்தம்,

முல்லைக்கு -இருத்தல், இருத்தல் நிமித்தம்,

மருதத்திற்கு- ஊடல், ஊடல் நிமித்தம்

நெய்தலுக்கு -இரங்கல்,இரங்கல் நிமித்தம்

பாலைக்கு -பிரிதல், பிரிதல் நிமித்தம் என உரிப்பொருள் அவ்அவ் நிலத்திற்கு தனித்தனி உரிப்பொருள் அமையப் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது .

## மக்கள்

தமிழ் மக்கள் அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்பத் தொழில் செய்து வாழ்ந்தனர். தொழிலுக்கு ஏற்பப் பெயர் பெற்றனர். குறிஞ்சி நிலத்து மக்கள் - வேட்டுவர், குறவர், குறத்தியர் எனவும்



கழிவுநீர் வடிகாலுடன் கூடிய சங்ககாலக் கட்டடம்

முல்லை நிலதினர் - இடையர், இடைச்சியர், பொதுவர் எனவும், மருத நிலத்தினர் - உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் எனவும் நெய்தல் நிலத்தினர் - பரதவர், நுழையர், நுழைத்தியர் எனவும், பாலை நிலத்தினர் - மீளி,விடலை,காளை எனவும் அழைக்கப் பெற்றனர்.

### சங்க இலக்கியங்களின் தனித்தன்மை

சங்க இலக்கிய அகப்பாடல்களில் ஒருபோதும் தலைவன், தலைவி முதலிய அகப்பாடல் உறுப்பினர்களின் இயற் பெயர் சுட்டி அழைக்கப் பெறுவதில்லை. இதனை,

'மக்கள் நுதலிய அகன்
ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்'

என்பார் தொல்காப்பியர் .

### மக்கள் வாழ்க்கை முறை

தமிழர்தம் வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அவர்தம் இல்லற முறைமை புலப்படுத்தி நிற்கின்றன. இனிய இல்லற



இலங்கையின் வடபகுதியில் கிடைத்த கல்லறைச் சாடி

வாழ்க்கை அன்பின் ஐந்திணை எனப் படும். களவொழுக்கம், கற்பொழுக்கம் என வாழ்வியல் இரு பிரிவுகளாகக் காணப்பட்டன. திருமணப் பருவம் அடைந்த தலைவன், தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் கண்டும், விரும்பியும், சந்தித்து தங்கள் கருத்துக் களை பகிர்ந்து, மணம் செய்து கொள்ள விழையும் காலம் வரை களவொழுக்கம் என்பர்.

திருமணத்திற்குப் பின் தலைவனும் தலைவியும் கூடி இல்லறம் நடத்தும் பாங்கினை விரித்துக் கூறுவதே கற்பு ஒழுக்கம் என்பர் தமிழர் தம் பெருமையே இவ்விரு இனிய வாழ்வியல் முறையால் எடுத்து இலக்கியத்தில் காட்டப் பட்டுள்ளன என்றே கூறலாம் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கையில் அமைய வேண்டும் என்பது முன்னோர் கண்ட முடிபாகக் கொள்ளலாம். காதலர் இருவருக்கும் உற்ற துணையாய் நின்று உதவுபவர்களாக பாங்கன், தோழன், தோழி, செவிலித்தாய் ஆகியோர் இருந்தனர் .

### தலைவன், தலைவி களவு, கற்பு வாழ்க்கை

சங்க கால வாழ்க்கை இயற்கை யோடு இணைந்ததாய் இருந்ததை அறிவோம்.நிலத்தின் இயல்பிற்கு ஏற்ப வாழ்வியல் ஒழுகலாறு அமைந்து இருந்தது. தலைவியானவள் தினைப் புனம் காத்தலும், தலைவன் வேட்டை யாட அவ்வழியாய் செல்லும்போது தலைவியைத் தினைப் புனத்தில் கண்டு, அவள் அழகில் மயங்கி அவள் யாரென அறிதலும், தலைவியும் தலைவனின் கட்டான உடல் அழகிலும், அவன் யானை, புலி முதலிய விலங்கு

களை வேட்டையாடி வீரம் விளை விக்கும் செயல்களையும் கண்டு அவனைத் தன் கணவனாக வரித்துக் கொள்ள விரும்புதல் என இப்படியாக அவர்கள்தம் காதல் வளர்ந்துகொண்டே வரும். தலைவியின் உடலில் ஏற்படும் மாற்றங்களை நற்றாய் மற்றும் செவிலித் தாயும் அறிவர். தலைவி காதல் வயப்பட்டதனை உணர்ந்த தாய் இல்லத்தில் இருக்கச்செய்வாள். இதனை இல்லிருத்தல் எனச் சொல்வர். தலை வனைக் காணமுடியாத தலைவியின் வருத்தம் போக்க இரவுப்பொழுதில், தலைவியின் கட்டுக் காவலையும் தாண்டி தலைவன் வந்து அவளைக் கண்டு ஆறுதல் கூறி விடை பெறுவான். இவ்வகையான நிகழ்வுதனை ஏற்றுக் கொள்ள மனம் விரும்பாத தோழி, விரைவில் தலைவியை மணம் புரிந்துக் கொள்ள தலைவனை வேண்டுவாள். அவனும் தலைவியின் வருத்தம் போக்கி விரைந்து வந்து மணம் செய்து கொள்வான். இவ்வாறாக இல்லற வாழ்வு இனிதே தொடங்கும் எனலாம்.

**சங்ககால குமுகாய வாழ்க்கை**

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். நிலப்பாகுப்பாட்டிற்கு ஏற்ற வாழ்வு அவர்தம் வாழ்வாகும். தொழில் வழி அழைக்கப் பட்டனர். பிறப்பின் வழியாய் சாதிப் பாகுபாடுகள் இருந்ததில்லை. பிற்காலத்தில் ஆரியர்தம் வருகைக்குப் பின் சாதிப் பாகுபாடுதனைப் புகுத்தி விட்டனர் என்பதை அறிய முடிகிறது.

**பொருளாதார வளர்ச்சி**

காடு வெட்டி நாடாக்கி, குளம் அமைத்து நீர் வளம் பெருக்கி பயிர்த்



முன்புறம் பின்புறம்

சங்ககால நாணயங்களின் தோற்றம்

தொழில் செய்தனர் தமிழ் மக்கள். உழவுத் தொழில் செய்தவர் 'வேளாளர்' எனப் பட்டனர். வேளாண்மை என்பது உழவுத் தொழிலைக் குறிக்கும். குறுநிலப் பகுதியில் உழவுத் தொழில் செய்தோர் 'வேளிர்' என அழைக்கப் பெற்றனர் அவர்கள் குறுநில மன்னர்களாய் விளங்கினர். நெல், வரகு, தினை, கொள்ளு, உளுந்து, தட்டைப் போன்ற தானிய வகைகளை உணவுக்காகப் பயிரிட்டனர். கரும்பும் பயிரிட்டனர் எனவும் அறிய முடிகிறது பெரும் நிலப்பகுதியை உரிமையாகக் கொண்டிருந்தவரை 'கிழார்' என்று அழைத்தனர் .

**வணிகம்**

தமிழர் தொன்று தொட்டு நீர், நிலம் வழி வணிகத்தில் ஈடுபட்டனர். தமிழர் தம் பண்பாட்டின் கூறுகள் கிரேக்க ரோமானிய, சுமேரிய, சீன நாகரிக அகழ்வுகளின் வாயிலாக இன்று அறிய முடிவதன் மூலம் தமிழர் தம் வெளி நாட்டு வணிகத்தை உய்த்து உணர முடிகிறது. கடல்வழி வணிகத்தில்



கடலுக்கு அடியில் மூழ்கியிருக்கும் சங்ககால சான்றுகளில் சில

காவேரிப்பூம் பட்டினம், தொண்டி, முசிறி கொற்கை ஆகிய துறைமுகங்கள் பயன்பட்டன. கிரேக்கம், சீனம் ஆகிய நாடுகளில் இருந்து விலை உயர்ந்த வாசனைத் திரவியங்கள், பொன், பீங்கான், பட்டுத்துணி இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது. தமிழகத்தில் விளைந்த ஏலம், இலவங்கம், மிளகு மெல்லிய ஆடைகள் ரோமானிய, கிரேக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது.

### பண்பாடும் நாகரிகமும்

சங்ககால சமுதாயம் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் மேம்பட்டு விளங்கியது. சிற்பம், ஓவியம், போன்ற கலைகள் வளர்ச்சி பெற்றிருந்தன. கலைஞர்கள் ஆகிய பாணர்களும், கூத்தரும், விறலியும் அரசராலும் ஏனைப் புரவலராலும் மதிக்கப்பட்டனர். சங்க கால மக்கள் உடல்சார் வாழ்க்கையை விட உள்ளஞ்சார்ந்த வாழ்க்கைக்கு சிறப்பிடம் கொடுத்தனர். அதனால் அன்பு, அருள், வாய்மை, நட்பு போன்ற நற்பண்புகளைப் பெற்று விளங்கினர்.

### பொதுமை அறம்

சாதிசமய பூசல்கள் சங்ககாலத்தில் இல்லை. தீண்டாமைக் கொடுமை அறவே இல்லை. ஏற்றத்தாழ்வற்ற அக்காலச் சமுதாயத்தில் எல்லா இனத்தவரும் ஒன்றி வாழ்ந்தனர். காதலர்களை இனம், சாதி, கொடுமை ஆகியன கட்டுப்படுத்தாத காலம் அது. நீதி, தண்டனை போன்றவை அனைவர்க்கும் பொதுவாய் இருந்தன.


சங்க காலத் தமிழ் மக்கள் நாகரிகம், பண்பாடு, கல்வி, ஒழுக்க நெறி, தெய்வ வழிபாட்டுமுறை ஆகிய வற்றில் மேம் பட்டு விளங்கினர் என்பதை நன்கு அறிய முடிகிறது .

சங்க காலத்தின் பெருமைகளை சங்க இலக்கியங்களும், கல்வெட்டு களும், பிறநாட்டார் குறிப்புகளும் அழகாக எடுத்துரைக்கின்றன. பொற்காலம் என்ற ஒன்று தமிழ்நாட்டில் நிலவியிருக்கு மானல் அது சங்க காலமாகத்தான் இருக்கும்.

*இலக்கிய ஆய்வாளர்களின் பதிவுகளில் இருந்து– தங்காமணி*

மனித இனத்தின் முதன்மையான செயற்பாடு தற்காலத்தில் எது தெரியுமா?

# குப்பை கொட்டுவது



மேலே உள்ள இப்படம் மனிதனால் விண்வெளியில் உருவாக்கப்பட்ட குப்பைகளின் நிலைகளைக் காண்பிக்கிறது. இது நாசா நிறுவனத்தால் கணினியில் வடிவமைக்கப்பட்ட படம்.

இந்தக் குப்பைகள் சாதாரணமாக கடதாசிக் குப்பைகள் அல்ல. உலோகங்களும் நெகிழிகளும் (பிளாத்திக்) கொண்ட மிகவும்பாரமான அபாயகரமான குப்பைகள்.

நம் முன்னோர் இப்படியான நவீன குப்பைகள் எதையும் விண்வெளிக்கு அனுப்பாமல் எவ்வளவோ கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளார்கள். அதன்படி வானியல் சாத்திரத்தையும் எமக்கு வழங்கியிருக்கின்றனர்.

ஆனால், நவீன மனிதனோ ஆய்வு என்ற பெயரில்-வளிமண்டல ஆய்வு, வேறு கோள்களை ஆய்வு செய்தல், ஒரு நாட்டை இன்னொரு நாடு வேவு பார்த்தல் போன்ற யுத்தம் நடத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளுதலுக்கான செய்மதிகள், என பலவற்றை விண்வெளியில் சேர்த்துள்ளான். அதன் பழுதடைந்த பாகங்கள் இலட்சக்கணக்கானவை குப்பைகளாக பூமியின் மீதாக மிதந்து கொண்டிருக்கின்றன. இவை அவ்வப்போது பூமியின் ஈர்ப்பு விசைக்குள் வந்ததும் பூமியால் ஈர்க்கப்பட்டு தரையை மோதுகின்றன.


எப்பொழுது எது விழும் என்பது உண்மையில் சரியாகக் கணிக்கப்படமுடியாது. தொடர்பாடலுக்கானதும் பூமியின் வள ஆய்வுக்கானதுமான செய்மதி இயந்திரங்களும் இவற்றுடன் சேர்ந்துள்ளன. வல்லரசுகளுக்கிடையிலான போட்டி இத்தகைய முன்யோசனையற்ற பணிகளை எல்லாம் மேற்கொள்ள வைத்துள்ளது. மக்களே விழித்திருப்போம்.



பி.மதுமிதா தரம் 2
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



பி.மதுமிதா தரம் 2
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



அ.சயன் தரம் 2
கொற்றாவத்தை
அ.மி.த.க.பா



ஜெ.ஜெனிஸ்ரன் தரம் 9
உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி



க.கஜை தரம் 4 கொற்றாவத்தை அ.மி.த.க.பா



செஅஜன் தரம் 3
கொற்றாவத்தை
அ.மி.த.க.பா



பி.பிறேமிதா தரம் 6
உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி

70/-

மாணவர்களே! நீங்கள் கைபேசியில்
(viber-வைபெர் ஊடாகவும்) தொடர்பு
கொள்வதற்கு தொடர்பு எண்: 0771461509